நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

டிச 1982





வட ஆற்காடு மாவட்ட நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 7-11-82 அன்று வேலூரில் நடைபெற்றபோது அதன் தலைவர் திரு. பிஆர். மெய்யப்ப செட்டியார் உரையாற்றுகிறார். அருகே (இடமிருந்து வலமாக) திரு. பழ. கருப்பையா, செயலாளர் திரு. என்கே வெங்கடாசலம் செட்டியார், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் திரு. ஆர்எம். நாராயணன்.

ஓர் யோசனை!

அயோத்தி மாநகரில் நகரத்தார் சத்திரத்தில் மிகப் பெரிய அளவில் உள்ள இராமன், இலட்சுமணன், சீதை, அனுமன் ஆகிய சிலைகள் தரிசிப்பவர் உள்ளங்களைப் பரவசப்படுத்துகின்றன. அயோத்தி மாநகரில் சுமார் 3500 இராமர் கோயில்களுக்கு மேல் உள்ளன. அக் கோவில்களில் உள்ள சிலைகள் எல்லாம் பளிங்குக் கற்களால் செய்யப் பட்டவை. நான் அறிந்த வரையில் நம் நகரத்தார் சத்திரத்தில் உள்ள சிலைகள் மட்டுமே பஞ்சலோகத்தால் செய்யப்பட்டுள்ளன. நகரத்தார்கள் மிக்க சமயப் பொறுமை கொண்டவர்கள். ஆதலால் சமய வரலாற்றில் பெருமை பெற்றவர்கள். நகரத்தார்கள் மிகக் குறைவாக உள்ள அயோத்தி மாநகரில் இத் திருவுருவங்கள் இருப்பதை விட அவைகளைச் சென்னைக்குக் கொண்டு வந்து அங்கு புதியதொரு இராமர் கோவிலை ஏற்படுத்தலாம். பல்வேறு தெய்வங்களுக்கு ஆலயங்கள்கட்டிய நகரத்தார்கள் தன்னிகரில்லா இராமருக்கும் ஓர் ஆலயம் ஏற்படுத்தினர்கள் என்ற பெருமை ஏற்படும். அயோத்தி நகரத்தார் சத்திரத்தில் மற்ற இடங்களில் இருப்பதைப் போலவே பளிங்குக் கற்களால் ஆன சிலையை வைக்கலாம்.

—டாக்டர் ஆறு. அழகப்பன்
இயக்குநர், தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

(காரைக்குடியில் உள்ள ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு எழுதிய கடிதத்தில்)

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

குரல் 1
ஒலி 11

துந்துபி
கார்த்திகை

டிசம்பர்
1982

உன்னைத் தவிரமற்றொருன்(று) உண்டென்றும் உன்னுமவர்
என்னைத் தொடராவாழ்(வு) என்றருள்வாய்?— முன்னை
ஒழுக்கம் கருணைதவம் உள்ளவரை எல்லாம்
இழுக்கும் பழியைப்ப ரேனே.

— தண்டபாணி சுவாமிகள்.

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001

தொலைபேசி : p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

தனி இதழ் ரூ. 1-00
ஆண்டுச் சந்தா ரூ. 12-00

டிசம்பர் - 1982



ஏதேனும் ஆவேனே

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

மெய்யென்று கொண்டு வினைக்கயிற்றால் கட்டுண்டு
பொய்யில் கிடக்கும் புலைப்பிறவி நான்வேண்டேன்.
கையெடுத்துக் கும்பிட்டால் காட்சிதரும் காந்தமலை
ஐயப்பன் அடியார்கள் அடித்தூசாய் ஆவேனே.

மாயத்தின் உள்ளே மனத்தோணி மீதேறிக்
காயத்தை நம்பிக் கடைவிரிக்க எண்ணாதேன்
தூயவரம் தந்தாளும் சோதியெனும் ஐயப்பன்
நேயமுடன் வீற்றிருக்கும் நெய்த்தேங்காய் ஆவேனே.

மன்னவனாய் வாழ்ந்தாலும் மண்ணாக்கும் பொய்வாழ்க்கை
தன்னைப் பெரிதென்று சத்தியமாய் நான்மதியேன்
என்னுள் இருந்தே எனக்குணர்த்தும் ஐயப்பன்
பொன்னார் சபரிமலைப் பூவாய்ப் பிறப்பேனே.

கொம்பேறித் தாவும் குரங்குமனக் கூப்பாட்டை
நம்பாமல் வாழும் நலம்வேண்டி நிற்கின்றேன்
தம்பால் இழுத்துத் தரங்கொடுக்கும் ஐயப்பன்
எம்பெருமான் சந்நிதியில் ஏதேனும் ஆவேனே.

நகரத்தார் குரல்

வழி காட்டும் திருமணம்!

நகரத்தார்க்கு ‘முற்பட்டோர்’ என்றுள்ள முத்திரை ஒரு பெரிய சுமை. கல்வி, வேலை வாய்ப்புக்களில் நமக்குச் சாதகமான சூழ்நிலை அமைய வேண்டுமானால் பிற்பட்ட வகுப்பினராக நம் சமூகம் அறிவிக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை உண்மையிலேயே நம் மீது இரக்கம் கொண்ட, நல்லிதயம் படைத்தவர்கள் மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

இது தவிர நம்மினத்துத் திருமணங்கள், விசேடங்கள் கொடுக்கல் - வாங்கல் முறைகள் நடுத்தர ஏழை மக்களை மேலும் மேலும் ஏழைகளாக்கிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நம் திருமணங்களைச் சிக்கனமாக, சீர் திருத்தமாக நடத்திட நம்மில் பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் முயன்றும் அன்று வெற்றி காண முடியவில்லை. இதற்குக் காரணம் யார்? சற்றே சிந்தியுங்கள்!

அண்மையில் பள்ளத்தூரில் நம்மவர்களின் திருமணம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. அத்திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டாருக்கு, பெண் வீட்டார் மாமியார் சாமான், சீதனம், மாப்பிள்ளைச் சாமான், சீர் வரிசைகள் என்று எதுவுமே கொடுக்கவில்லை. இது போன்ற புரட்சிகரமான திருமணங்கள் தொடர்ந்து நடைபெறுமானால் நம் இனம் சிறப்படையும். திருமண நாளை எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் ஏராளமான கன்னியர்களின் வாழ்வு வளம் பெறும்.

கலியுகவரதன் ஐயப்பன்

'நாகப்பா' மணி, சிறுகூடல்பட்டி.

கிடைத்தற்கரிய மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் எல்லாம் வல்ல இறைவனின் திருவடியடைவதற்குள்ள பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு அவனைப் பணிந்து பாடி அவன் அருள் பெற வேண்டும் என்பதற்காக சர்வேசுரன் பல்வேறு உருவங்களில் அவதாரம் செய்து உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டி தெய்வப் பற்றை ஏற்படுத்தினன் என்பதை நாம் நமது புராண இதிகாசங்களிலிருந்து அறிகிறோம். அவ்வாறு ஏற்பட்ட அவதாரங்களில் இக் கலியுகத்தில் ஐயப்பனின் அவதார மகிமை மிகவும் விசேடமானது. பரசுராமரால் கேரளவள நாட்டில் பதினெட்டு இடங்களில் காவல் தெய்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களில் சபரிமலை சாஸ்தாவின் ஆலயம் மிகச்சிறந்ததாகும். அரிகர புத்திரனாய் அவதாரம் செய்து, பாண்டிய நாட்டு மன்னர்களின் பரம்பரையைச் சேர்ந்த பந்தள பூபாலனிடம் மணிகண்டனாய் சேவகம் செய்து, தேவர்களின் துன்பம் தீர்க்க மகிசமுகி என்னும் அரக்கியை வதைத்து, குளத்துப்புழையில் அழகு பாலகனாகவும் ஆரியங்காவில் இல்லறம் பூண்டு திருக்கல்யாணக் காட்சியுடனும், அச்சன் கோவிலில் தியானத்திலிருக்கும் வானப்பிரஸ்தனாகவும், எரிமேலியில் வில் அம்பு கொண்டு வேட்டையாடுபவராகவும், யோக நிஷ்டையில் துறவறக் கோலத்துடன் சபரிமலையிலும், ஜோதி மயமாக காந்தமலையிலும், ஐயப்பன் அருள் புரிகிறார். ஐயனைக் கண்டு அவன் திருவருள் பெற வருடத்தில் இரு மாதங்கள் முற்றும் துறந்த முனிவராய் கடுமையான விரதக் கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் கடைப்பிடித்து இப்புனித சபரிமலை யாத்திரையைத் தொடங்குவதால் ஐயப்பமார்களில் பெரும்பாலோர் நல்ல ஒழுக்கத்தையும் கட்டுப்பாடுடன் கூடிய வாழ்க்கையையும் நித்தியம் தம் வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதைப் பார்க்கிறோம். அன்றாட உலக வாழ்க்கையிலிருந்து மாறி, இறைவன் திருநாமம் கூறி அவன் புகழ் பாடித் துதித்து மனச்சாந்தி பெற்று பாவச் சுமைகளைக்



குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பை இப் புனித யாத்திரை நமக்கு அருளுகிறது.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஐயப்பன். சைவ வைணவ ஒற்றுமை காட்டி இன மொழி வேறுபாடுகளைக் கடந்து வழிபடச் செய்பவன் ஐயப்பன். புலனடக்கம் பக்தி இரண்டும் தரும் வழிபாட்டுக்கு உரியவன் ஐயப்பன். அவனருளால் அவன் தாள் வணங்கி நம் வாழ்வில் முன்னேறுவோமாக!



வாழையடி வாழை

இருபத்தொரு நாளும் விரத மிருந்த பழைய காலத்தில், அந் நாட்களை எண்ணிக் கொள்வதற் கும், நிறைவு நாளில் திரி செய்வ தற்கும் ஏற்ற பாங்கில், நாளொன் றிற்கு ஓர் இழையாக எடுத்து வைத்தனர். இவ்விழையைக் குடும்பத் தலைவர் கோடியாடையி லிருந்து எடுத்துக் கொடுக்க, தலைவியாகிய ஆச்சி, அதைப் பய பக்தியுடன் வாங்கிச் சாமி வீட்டில் பத்திரமாக வைப்பாள். இதனை ''இழையெடுத்துக் கொடுத்தல்'' என்றூர்கள். இங்ஙனம் எடுத்து வைத்த இழைகளை ஒன்றுசேர்த்து மாவிளக்கில் திரியாகப் பயன் படுத்தினர்.

நாட்களை எண்ணிக்கொள்ளச் சுவரில் சாணத்தால் கோடுகள் இட்டு வந்து, அவற்றை எண்ணிக் கணக்கிடும் வழக்கம் போன்றது இது. தலைவன் பிரிந்திருக்கும் நாட்களில் சுவரில் இட்ட கோடு களை எண்ணி எண்ணி விரல்களும் தேய்ந்து விட்டன; ஆனுல் அவன் வரவில்லை என்பார் திருவள்ளு வர். வழியை வழியைப் பார்த்துக் கண்ணும் பூத்துப் போயிற்றும்; சுவரில் போட்டு வைத்த கோடு களை எண்ணிக்கை தவறக்கூடா தே என்று நன்ருக விரலை ஊன்றி எண்ணி, அவ்விரலும் தேய்ந்து விட்டதாம்.

''வாள் அற்றுப் புற்கென்ற
கண்ணும்; அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல்''
— திருக்குறள் 1261

நோன்பு நிறைவு நாளில் ஆச்சி சாமி வீட்டில் அரிசி மாவினுல் செய்த 'கோலக்கூட்டால்' அழ கிய கோலமிடுவாள். மாலை அல் லது இரவில், குத்துவிளக்கும், சிறிய நெய்விளக்கும் ஏற்றி வைத்து, நாழியில் (அரைப்படி) நெய் நிறைத்து 'நிறைநாழி' வைத்து, பிள்ளையாரின் சிறு திரு வுருவத்தை (வெள்ளியால் ஆகி யது) எழுந்தருள்வித்து, திருமுன் னர் இலை பரப்பி, பொரி, கருப் பட்டிப் பணியாரம், (பண்ணி காரம்) வடை, வெள்ளைப் பணியா ரம் முதலிய சிற்றுண்டிகளைப் படைப்பாள். பிள்ளையார் நோன் பிற்கு வேண்டும் என்றே, மண மகளுக்குத் தாயார் கொடுக்கும் சீதனத்தில், 11, 16 என்ற எண் ணிக்கையில் வைக்கும் வெள்ளிக் கலன்களில் ஒன்று பிள்ளையார் திருமேனி. (சாமான் என்பது தமிழ் அன்று. 'சாமான் பரப்புதல்' என்பதைக் 'கலன் பரப்புதல்' என்றே கூறவேண்டும்)

செட்டியார் தம் தலையில் மேல் வேட்டியைத் தலைப்பாகை (தலைப் பா) கட்டிக் கொண்டு, இடை வேட்டியின் மேல் துண்டு கட்டி, வழிபாடு செய்ய ஆயத்தமாவார்.

கோலக்கூட்டை ஆச்சி கிண் ணத்தில் ஏந்த, செட்டியார் பனை

குருதீது

யோலை ஏடுகள் கட்டிய கயிற்றின் ஒரு பகுதியை அதில் தோய்த்துப் பிள்ளையார் திருவுருவம் சார்ந்துள்ள சுவரில் நெருக்கமாகப் பிடித்துக் கொள்ளுவார். மூத்த மகன் அல்லது ஆச்சி கயிற்றைத் தெறிக்கச் சுவரில் கோடு விழும். இவ்வாறு ஒரு சதுரக் கட்டம் இடப்பெறும். கைபடாமலும் நேராகவும் சதுரம் அமைக்கும் வழி இது. இது பிள்ளையாரின் ஆசனம். இவ்வாறு ஆசனம் அமைப்பதைத் 'தும்பு பிடித்தல்' என்பர். இதில் பிள்ளையாரை எழுந்தருள்விப்பதாகப் (ஆவாகனம்) பாவனை செய்து கொள்வர்.

பிறகு, குடும்பத் தலைவர் தடுக்கில் (பனையோலை மிடைந்தது) அமர்ந்து, திரட்டுப் பால் அல்லது கருப்பட்டி மாவை முக்கோண வடிவில், ஒரு மிகச்சிறிய குன்று போலத் திரட்டி எடுத்து, 21 இழைத் திரியை நெய் தொட்டு அதில் பொருத்தி, நெய் விளக்கில் சுடர் கொளுவிப் பிள்ளையாருக்குக் காட்டி வழிபடுவார். அதைத் தமது நெற்றிக்கு நேரே பிடித்து ஜோதியைக் கண்ணாரக் கண்டு, தமது வாயில் இட்டு உண்பார். சுடரை ஊதி அணைக்காமல் உண்ணவேண்டியது முறை. ஜோதியாய் விளங்கும் இறைவனை நம் முன் — நம் ஆன்மாவில் - கலக்கச்செய்கின்றோம் என்பதே இதன் தத்துவம். பிள்ளையார் தமது திருவுருவத்திலிருந்து மாவிளக்கில் அருவுருவமான ஜோதியாக எழுந்தருளி நம்முன் ஐக்கியமாகின்றார். இந்த ஜோதி ஐக்கியத் தத்துவம் இந்நோன்பில் இருப்பதாலேயே, இதனை நகரத்தார் வீடுகளில் கொண்டாடுவதுடன், வளரொளி நாதர், வடிவுடையம்மையுடன் எழுந்தருளியுள்ள வயிரவன் கோவிலிலும் நகரத்தார் ஒரு பொது நிகழ்ச்சியாகக் கொண்டாடுகின்றனர். நகரத்தார்களின் மற்ற எட்டுக் கோயில்களிலும் இவ்விழா கொண்டாடப் பெறுவதில்லை. காரணம் இங்குச் சிவபெருமான் வளர் ஒளியாக — எல்லை காணாத ஜோதியாக விளங்குகின்றார் என்பதே.

ஆவணி மாதத்தில் விநாயக சதுர்த்தி விழாக் கொண்டாடும் பிற இந்துக்கள், விநாயகரின் மண் உருவத்தை ஊர்வலமாகக் கொண்டு சென்று, நீர்நிலைகளில் இட்டு வருவர். தண்ணீர் ஆன்மாவைக் குறிப்பது ஆதலின், இறைவன் ஆன்மாவில் கலப்பதுதான் அங்கும் கருத்து. இறைவன் ஆன்மாவில் ஒன்றாகியும், உடனாகியும் இருக்கின்றான் என்பது சைவ நெறிக் கொள்கை. மாவிளக்கில் ஜோதியை ஏற்றி நம்முள் அடக்கிக் கொள்ளுவது, இறைவன் நம்மோடு உடனாகி நின்று, சிவானுபவம் தருவதைக் குறிக்கும். வாழையடி வாழையாகச் சைவ

"ஏன் மானி! நம்ம முடுக்கு வீட்டு நாச்சியப்பனைக் கூட்டுச் சேர்த்துக்கினு மதுரையிலே ஏதோ பெரிசா கடை ஆரம்பிக்கிறாய்னு கேள்விப் பட்டேன். ஏன் அவனை வெட்டிவிட்டுட்டாய்?"

"மானி..! என் கலியாணத்துக்கு முன்னாடி நம்ம முடுக்கு நாச்சியப்பன்தான் என் பொண்டாட்டியைப் பெண் ணெல்லாம் பார்த்திட்டு வந்திருக்கான்! சேஞ்சுக்கப்போற நேரத்திலே வேண்டாம்னு சொல்லிக் கல்யாணம் நின்னு போச்சு! என்னைவிடக் கெட்டிக்காரனா இருக்கிறவன் வேண்டாமின்னுதான் வெட்டிவிட்டுட்டேன்".

— பழ. கரு.

நெறியில் வாழ்ந்து வரும் நாட்டுக் கோட்டை நகரத்தார், பிள்ளையார் நோன்பைக் குடும்பத்தின் கட்டாய விழாவாக்கி, அதில் ஜோதி ஐக்கியத் தத்துவத்தைக் குறிக்கும் ''இழையெடுத்தலை''ச் செய்து வருவது, சைவக் கொள்கையின் பயனை வாழ்வில் எய்துவதற்கு எண்ணம் உடையவர் என்பதைக் காட்டும். இந்நோன்பினுல் தங்கள் ஒன்பது நகரக் கோவில்களுள் ஒன்ருகிய வயிரவன் கோயிலுக்கும் ஒரு சிறப்புச்சேர்த்துள்ளனர்.

இருபத்தொரு நாள் நோன்பிருந்து பிள்ளையாரை வழிபட்டதையும், பிள்ளையார் ஓங்காரம் ஆகிய பிரணவத்தின் அதிதேவதை என்பதையும், ஓங்காரத்தின் உள்ளொளியாக வளரொளியாக-திகழ்பவன் சிவபெருமான் என்பதையும், அவனே நமது ஆன்மாவில் பரஞ்ஜோதியாக விளங்குவான் என்பதையும், ''உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா, விமலா, விடைப்பாகா'' என்ற திருவாசக மெய்ம்மொழியையும் இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

குடும்பத் தலைவர் முதலில் வழிபட்டு உண்பது குடும்பத்தில்மூத்த தமையனுகிய பிள்ளையாருக்கு உரிய இழையாகும். இதையடுத்து அவர் செய்வது, குடும்பத்திற்கு வாழ்வும் மங்கலமும் வளர்ச்சியும் நல்கும் செய்கையாகும். இதன் பொருட்டே குடும்பத்தார் எவ்வூரில் இருப்பினும், நோன்பிற்குக் குடும்பத் தலைவர் உள்ள ஊருக்கு வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் முறைப்படி, தலைவர் இழையெடுத்துக் கொடுப்பார். அவர்தம் தாயார் இருந்தால், அவருக்கு முதலில் அளித்துத் தம்பியர் திருமணம் ஆகி அல்லது ஆகாமல், ஒன்ருயிருந்தால் அவர்களுக்கு அளித்துப் பிறகு தமது மூத்தமகன், பிற ஆண் மக்கள், தம் மனைவி, தம்பி மனைவியர், தங்கையர், பின்னர் பெண் மக்கள் ஆகியோருக்கு அளிப்பார். அவர்களும் ஜோதியை ஊதியணைக்காமலே, வழிபட்டு உண்ணுவர். எல்லோர்க்கும் கொடுத்தபின், செட்டியார் தமக்குரிய இழையை 'எடுத்துக் கொள்வார்'

நகரத்தார் குடும்பம் ஒவ்வொன்றிலும் மூத்த தமையன்மார்களாகக் கொள்ளப்படும் பிள்ளையார், முருகன்-இருவரையும் இணைத்துக் கொண்டாடப்பெறும் நோன்பு விழாவாதலின், ஆச்சிமார்கள் இதைப் 'பிள்ளையாந்தம்பி' அல்லது 'பிள்ளாந்தம்பி' என்றே கூறுவர். பிள்ளையார் நோன்பு என்பது இவ்வாறு மருவவில்லை. ஆனுல் ''பிள்ளையார் - தம்பி நோன்பு'' என்பதே மருவி வந்துள்ளது. மொழியியல் விதிப்படி ஒரேமாதிரிச் சொல் அடுத்தடுத்து வந்தால், அவற்றுள் ஒரு சொல் கைவிடப்பெறும். அதன்படி செட்டியார்கள் ''தம்பி''யைக் கைவிட்டனர். ஆச்சிகள் ''நோன்பை''க் கைவிட்டனர். இங்ஙனம் இது அண்ணன்-தம்பி விழாவாதலின், இம்முறையினரான பங்காளிகள், பழைய காலத்தில் எல்லாம், தம்முன் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று, நோன்பைப்பற்றி 'விசாரித்து'ச் சிற்றுண்டி அயின்று வருவர். இவ்வாறு செல்லும் 'விசாரணை நடையில்', தலைவர் இல்லாத வீட்டில், பங்காளிகளுள் மூத்தவர் இழையெடுத்துக் கொடுப்பார்.

பிள்ளையார்-தம்பி நோன்பு குடும்பத்தில் மங்கலத்தையும் பங்காளிகளுள் ஒட்டுறவையும் வளர்ப்பதாகும்.

(தொடரும்)

நவக்கிரகங்களும் அவற்றிற்குரிய நவரத்தினங்களும்

புதன் பச்சை (மரகதம்)	சுக்கிரன் வைரம்	சந்திரன் முத்து
குரு புஷ்பராகம்	சூரியன் சிவப்பு (மாணிக்கம்)	செவ்வாய் பவளம்
கேது வைடூரியம்	சனி நீலம்	ராகு கோமேதகம்

நவக்கிரகங்களுக்குரிய அதிதேவதைகள்:

சூரியனுக்கு	- சிவன்	சுக்கிரனுக்கு	- வள்ளி
சந்திரனுக்கு	- பார்வதி	சனிக்கு	- யமன்
செவ்வாய்க்கு	- முருகன்	ராகுக்கு	- பத்திரகாளி
புதனுக்கு	- திருமால்	கேதுக்கு	- இந்திரன்
குருவுக்கு	- பிரமன்		

—'எவர்பிரைட்'

மகாபாரதமும் இராமாயணமும்: சில ஒற்றுமைகள்

ஃ மகாபாரதமும் இராமாயணமும் நடைபெற்ற இடம் வட இந்தியா.

ஃ மகாபாரதத்தில் தர்மன், அர்ச்சுனன், பீமன், நகுலன் சகாதேவன் என ஐந்து சகோதரர்கள்.

ஃ இராமாயணத்தில் இராமன், லெட்சுமணன், சத்துருக்கணன், பரதன், குகன் என ஐந்து சகோதரர்கள்.

ஃ மகாபாரதத்தில் சகுனியும் இராமாயணத்தில் கூனியும் உண்டு. இவர்கள்தான் இந்த இதிகாசங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர்கள்.

ஃ மகாபாரதத்தில் கர்ணனும் இராமாயணத்தில் கும்பகர்ணனும் உண்டு.

ஃ மகாபாரதத்தில் துரியோதனும் இராமாயணத்தில் இராவணனும் கொடியவர்கள். ஆனால் அவர்களுடைய குணநலன்கள் இரண்டு காப்பியங்களிலும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அவர்கள் இருவரும் கடைசியில் காவியநாயகர்களால் கொல்லப்படுகிருர்கள்.

ஃ மகாபாரதத்தில் தர்மனும் இராமாயணத்தில் இராமனும் காவிய நாயகர்கள். இவர்கள் வனவாசம் செல்கையில் வன்முறையைச் சந்திக்கிருர்கள்.

ஃ மகாபாரதத்தில் பாஞ்சாலியும் இராமாயணத்தில் சீதையும் அவமானத்திற்குள்ளாக்கப்படுகிருர்கள். இவர்களால்தான் யுத்தமே நடைபெறுகிறது.

ஃ மகாபாரதத்தில் கண்ணனும் இராமாயணத்தில் அனுமனும் தூதர்கள்.

—எஸ். தங்கமணி

வ. சுப. மாணிக்கம் நகரத்தாரில் ஒரு மாசற்ற மாணிக்கம்!

வி. என். சிதம்பரம் செட்டியார்

டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களை எனக்குக் கடந்த பத் தாண்டுகளாகத் தெரியும். எப் பொழுது நான் அவர்களைப் பார்த்துச் சிரித்தாலும் வணக்கம் செலுத்தினாலும் அதற்குஅவர்கள் திருப்பிச் சிரித்ததாகவோ வணக் கம் செலுத்தியதாகவோ எனக்கு நினைவில்லை. அவர்கள் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பொறுப்பேற்றார் கள். அதன் பிறகு அவர்களை மே டைகளில் பார்த்தபோது என்னி டம் புதிய மனிதராகப் பழகினார் களே தவிர, எனக்குஅறிமுகமான வர்களாக அப்போது தென்பட வில்லை. சாதாரணகாலத்தில் சிரிக் காத நாம், பெரியபதவியில் இருக் கிறபோது சிரித்துப் பேசிவிட்டால் நம்மிடம் ஏதாவது சிபாரிசுக்கு வந்து விடுவார்களோ என்ற அச் சத்தின்காரணமாகஅவர்கள் சிரிக் காமல் இருந்திருக்கலாம். இருந்த போதிலும் அவர்களுடைய நேர் மையில் நான் வைத்திருந்த மதிப் பின் காரணமாக ஒருதலைக் காதல் போல் நான் எப்போதும் அவர் களைப் பார்த்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

ஒரு முறை அவர்கள் உடல் நல மில்லாமல்மருத்துவமனையில் சிகிச் சை பெற்றுக்கொண்டிருந்தபோது நானும் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களும் பார்க்கச் சென்றோம். அன்றும் அதே நிலைதான். அதன் பிறகு மதுரைஅருள்மிகு மீனாட்சிஅம்மன் ஆலயத்திலே தங்கரதத்தைவெள் ளோட்டம் விட்டபோது லட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்த நேரத்திலே, பல அமைச்சர்கள் மத்தியிலே வ. சுப. மா. அவர்கள் என்னைப் பாராட்டியது எனக்குப் புல்லரித்தது. வசிஷ்டர் வாயால் 'பிரம்மரிஷி' பட்டம் பெற்றது போல ஒரு உணர்வு என் உள்ளத் தில் எழுந்தது. கூட்டம் கலைந்த தும் அவர்கள் அருகில் சென்று ''நன்றி'' என்று நெகிழ்ச்சியுடன் கூறினேன். அதை அவர்கள் தன் காதிலே வாங்கிக்கொள்ளாமல் சென்றுவிட்டார்கள். என்னைப் பார்த்து முகம் கொடுத்துப் பேசா விட்டாலும் அவர்கள் என்னை மனதாரப் பாராட்டியதை என் வாழ்வில் கிடைத்த பெரும் பாக் கியமாகக் கருதினேன். இருந்தா லும் மனம்விட்டுப் பேசவில்லையே என்ற ஏக்கம் என் நெஞ்சத்தின் ஒரு ஓரத்தில் இருந்து கொண் டிருந்தது.

ஒருமுறை மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு நான் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்

டிருந்தேன். அப்போது எங்கள் இல்லத்திற்கு ஒருவர் வந்து என்னைப் பார்க்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். அதற்கு என்னுடைய பணியாளர் "நீங்கள் யார்?" என்று கேட்க, "மாணிக்கம் வந்திருப்பதாகச் சொல்லுங்கள்" என்று கூறியிருக்கிறார். எனக்குச் சட்டை தைப்பதற்கு மாணிக்கம் என்ற டெய்லர் வருவதாக ஏற்கனவே சொல்லியிருந்ததால் அவர்தான் வந்திருக்கிறார் என்று நினைத்து அவரை வரச் சொன்னேன். ஆனால் வந்ததோ பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்! யாரை எதிர்பார்த்து நான் ஏங்கிக் கொண்டிருந்தேனோ அந்தப் பெரிய மனிதர் அவ்வளவு எளிமையாக தன் பெயரைக் கூறிக்கொண்டு வந்தது எனக்கு மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது.

அந்த நேரத்திலேயே எனக்கு ஒரு தத்துவமும் புரிந்தது. தன்னுடைய பணியினால் பதவிக்குப் பெருமை தேடித் தர வேண்டுமே தவிர பதவியை வைத்துத் தன்னை உயர்த்திக்கொள்ளக் கூடாது என்ற தத்துவத்தைத் "துணை வேந்தர் வந்திருக்கிறேன்" என்று கூறாது "மாணிக்கம் வந்திருக்கிறேன்" என்று கூறியதை வைத்து உணர்ந்தேன். அதிலிருந்து எந்த இடத்திற்கு நான் சென்றாலும் மீனாட்சி அம்மன் கோவில் சேர்மன் வந்திருப்பதாக என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதில்லை. நான் வ. சுப. மா. அவர்களிடம் கற்றுக்கொண்ட பாடம் இது.

என்னுடன் அன்போடு பேசிக் கொண்டிருந்துவிட்டு மீண்டும் வருவதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். நான் வாசற்படி வரை சென்று வழியனுப்பி வைத்தேன். உடல் நலம் இல்லாத போது இந்தச் சம்பிரதாயங்களை எல்லாம் பார்க்கக் கூடாது என்று சொல்லி வாயிற்படிவரை வருவதைத் தடுத்தார்கள். நான் அதையும் மீறி வாயிற்படிவரை சென்று அவர்களை வழியனுப்பிவைத்தேன். அப்பொழுது தான் தெரிந்தது என்னைத் தடுத்ததற்குக் காரணம் - ஒன்று என் உடல் நலம் பாதிக்கக்கூடாது. மற்றொன்று - அவர்கள் வந்தது பஸ்ஸில். நான் மிகவும் வற்புறுத்தி எனது காரில் அவர்களை அனுப்பி வைக்க முயன்றேன். மறுத்துவிட்டு அவர்கள் பஸ்ஸிலேயே சென்று விட்டார்கள்.

பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு ஒரு கார் உண்டு. பல்கலைக் கழக வேலையாகச் சென்றால்தான் அந்தக் காரைப் பயன்படுத்த வேண்டும்; நண்பரைப் பார்க்கச் செல்லவேண்டுமானால் பஸ்ஸிலே தான் செல்ல வேண்டும் என்ற கடமை உணர்வும் நேரிய உள்ளமும் அவர்களிடமிருந்ததைக் கண்டு நான் மெய்சிலிர்த்தேன். பொதுப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு அறிவுரை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாமல், தானே நடந்துகாட்டிவிட்டுச் சென்ற தத்துவம் இது. இப்படிப்பட்ட நேர்மையாளர்கள் நகரத்தார்களிலே இன்னமும் இருக்கின்ற காரணத்தால்தான் நம் சமூகத்திற்கு என்றும் எப்பொழுதும் மரியாதையும் பெருமையும் கிடைக்கின்றது.

ஏற்றத் தாழ்வுகள் எத்தனை இருந்தாலும் இறுதி வெற்றி நற்பண்புகளுக்குக் காரணமான நகரத்தார்களுக்கே!

ஆசிரியர்: உன்னுடைய சொந்த ஊர் எது தம்பி?

மாணவன்: சொந்தமாக ஊர் வாங்குகிற அளவிற்கு என்னிடம் பணம் இல்லை சார்.

—பழ. கருத்தான்
குருவிக்கொண்டான்பட்டி

91/1

உங்கள் குரல்

அக்டோபர் இதழில் வெளி வந்த 'கண்ணீரில் கரைந்த கனவு கள்' சிறுகதை அல்ல; உண்மை நிகழ்ச்சி. நண்பர் பழ. கருப் பையா ஆச்சிகளிடம் கண்டு பேசிய கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டக் கூடியவை.

ராம. நாராயணன்
கொத்தமங்கலம்

அக்டோபர் இதழ், பழ. கருப் பையா அவர்களின் கைவண்ணத் தில் சமுதாய வளர்ச்சியின் கருத் தரங்க மேடைபோல் இருந்தது. பத்திரிகை படிக்கச் சுவையுடன் இருந்தது.

ஏ. எல். இராமநாதன்
புளியான்மலை, கேரளா

''நகரத்தார் குர''லில் நம் இனத்தின் குரல் ஒலிக்கக் காணு கின்றேன். ஆனால் இலக்கிய வடிவம் பெற வேண்டும்.

ரெ. முத்துக்கணேசன்
காரைக்குடி

நவம்பர் இதழில் நம் ஆச்சிமார் களின் பேட்டியைப் படித்து மகிழ்ந்தேன். மிகச் சிறப்பு.

அண. லெட்சுமணன்
தேவகோட்டை

பேராசிரியர் கண. சிற்சபேசன் எழுதிய 'அவன்-அவள்-அது' சிறுகதை சிறப்பாக இருந்தது. ஆசிரியருக்கு எனது பாராட்டுக் கள்.

மு. முத்துகணபதி சுப்பிரமணியம்
தஞ்சாவூர்

''நகரத்தார் குரல்'' வாயிலாக நம்மவரில் பல துறைகளில் உள்ளவர்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. 'ஆச்சிகள் உலகம்' பேட்டிக் கட்டுரை அற்பு தம். தொடரட்டும் அந்த நல்ல பணி.

இராம. அ. மெய்யப்பன்
குழிபிறை

'ஆச்சிகள் உலகம்' பேட்டிக் கட்டுரை அருமையாக இருந்தது. ஆச்சிமார்கள் அதில் பல தெளி வான கருத்துக்களைக் கூறியிருந் தார்கள்.

இராம. பழனியப்பன்
பூலாங்குறிச்சி

மணிவிழாக் கண்ட நம் குழந் தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பேட்டியின் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். கவிஞர் சிவல்புரி சிங்காரம் அவர்களின் கவிதை மனதைத் தொட்டது. கவிஞர் கண்ணதாசனுக்குப் பிறகு நம் மினத்திலிருந்து இவர் போல் கவிஞர்கள் அதிகம் வரவேண்டும்.

தி. வளையாபதி
கோநகர்

திருப்பையா என்றுரைத்தார் வி. என். சிடி. அவர்கள்
திருப்புகின்ற பக்கமெலாம் தித்திக்கும் கருத்துக்கள்!
வெறுப்பில்லா ஏற்கவேண்டிய வித்துக்கள்! விஷயங்கள்!
பொறுப்புடனே இதழை நிரப்பியவரே
கருப்பையா அவர்களே, இவை கறுப்பையா எனச் சொலோம்,
சிவப்பையா இவ்விதழ் வெகு சிறப்பையா
மறுப்பையா சொல்வாருண்டோ?- அத்தனையும்
'கரு'ப்பையா க்காட்சி தந்ததுவே!

—சரோஜா அண்ணாமலை, பாகனேரி.

பிரதிநிதிகள் நியமனம்

நமது " நகரத்தார் குர" லுக்கு உறுப்பினர்களைச் சேர்க்கவும் விளம்பரங்கள் சேகரிக்கவும் கீழ்க் கண்ட முகவரிதாரர்களை எமது பிரதிநிதிகளாக (பகுதி நேரம்) நியமனம் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அப் பகுதிகளில் உள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு எமது பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

தஞ்சாவூர் மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளுக்கு:

திரு. இராம. சோமசுந்தரம்
C/o மாஸ் புராடக்ட்ஸ்
57, இராஜன் ரோடு,
சீனிவாசபுரம்
தஞ்சாவூர் - 613 009.

திருச்சி மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளுக்கு :

திரு. தி. முத்துக்கருப்பன்
220, சப் ஜெயில் ரோடு
திருச்சி - 620 008.

சங்கராபுரம் மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளுக்கு :

வேந்தன்பட்டி
திரு. இராம. முத்துக்கருப்பன்
53, சன்னதி வீதி,
சங்கராபுரம் - 606 401
தென்னாற்காடு மாவட்டம்

கரூர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு :

திரு. மேலே பழனியப்பன்
அண்ணாமலை மெடிக்கல்ஸ்
207, ஜவஹர் பஜார்
கரூர்-639 001.

வேலூர் மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளுக்கு :

திரு. வி. நாகப்பன்,
2, தேசாய் நாராயணச் செட்டி தெரு,
வேலூர்-623 004
வட ஆற்காடு மாவட்டம்

புரட்சித் திருமணம்

சிராவயல் சொ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் இராமய்யா L.A.E க்கும் பள்ளத்தூர் சு. ராம. சுப. இராமநாதன் செட்டியார் அவர்களது புதல்வி டாக்டர் வள்ளியம்மை என்ற அல்லிக்கும் 7-11-82 அன்று பள்ளத்தூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இத் திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டாருக்கு மாமியார் சாமான், சீதனம், மாப்பிள்ளைச் சாமான், சீர்வரிசை என்று பெண் வீட்டார் எதையுமே கொடுக்கவில்லை. முறைதலைகளும் கிடையாது. இது ஒரு புரட்சித் திருமணமே!

துணுக்கு நடிகை

சற்றுப் பருத்துவிட்ட ஒரு திரைப்பட நடிகை இளைப்பதற்குப் பல முயற்சிகள் எடுத்து வந்தார். "குதிரைச் சவாரி செய்தால் எடை குறையும்" என்று ஒருவர் கூறிய யோசனையின்படி அவர் தினமும் குதிரைச் சவாரி செய்து வந்தார். பலன்? ஒரு வாரத்தில் இருபது பவுண்டு எடை குறைந்து விட்டது. குதிரையின் எடை தான்!

நன்றி: "உலக அறிவுகள் ஓராயிரம்"

— சொ. விஸ்வநாதன்,
ஆவினிப்பட்டி.

சாமியே சரணம் ஐயப்பா!

இருமுடியின் இணையற்ற தத்துவம்

ஒருமுறை நான் சென்னை சென்ற பொழுது, ஐந்தாறு பொருள்களோடு சென்றேன். ரயிலை விட்டு இறங்கியதும் அந்தப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வர இரண்டு போர்ட்டர்களை அழைத்தேன். வேகமாக என் அருகில் வந்த போர்ட்டர், ''ஐயா! நான் ஒருவனே எல்லாப் பொருள்களையும் தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன். இரண்டு பேருக்குக் கொடுக்கிற கூலியை எனக்குத் தந்துவிடுங்கள்'' என்று கேட்டார். நானும் அதற்குச் சம்மதித்தேன். எல்லாப் பொருள்களையும் அவர் ஒருவரே தூக்கிக் கொண்டு வந்து, ரயில் நிலையத்திற்கு வெளியில் நின்று கொண்டிருந்த என் காரில் வைத்தார். இரண்டு பேருக்குக் கொடுக்கும் கூலியான இரண்டு ரூபாய்களை அவரிடம் கொடுத்தேன். திருப்தியோடு அவர் போய் விட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் நான், முதன் முறையாகச் சபரி மலை யாத்திரையை மேற்கொண்டேன். அப்பொழுது இருமுடியைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கிய போது தான், சுமையின் அருமை தெரிந்தது. அதோடு சில மைல்கள் சென்ற பிறகு, பாரம் அதிகம் அழுத்தத் தொடங்கியது. தொடர்ந்து நடக்க முடியாமல் நான் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, சரணம் சொல்லி, பிறகு மீண்டும் நடக்கத் தொடங்கினேன். அப்பொழுது, எல்லாப் பொருள்களையும் தூக்கிக் கொண்டு வந்த போர்ட்டர் நினைவு எனக்கு எழுந்தது.

துன்பம் ஒன்றை நாம் அனுபவிக்கும் போதுதான் பிறர் துன்பத்தை அறியும் சக்தி, நினைத்துப் பார்க்கும் வாய்ப்பு, அதற்காக அனுதாபப்படும் மனநிலை ஆகியன நமக்கு ஏற்படுகின்றன.

''எல்லாப் பொருள்களையும் நான் ஒருவனே தூக்கிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிய பொழுது, 'பாரம் அதிகமாயிற்றே பாவம் அவர் தலை வலிக்குமே!' என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. அப்படித் தோன்றி



இருந்தால், இரண்டு போர்ட்டர்களை அழைத்து, இருவரையும் பொருள்களை தூக்கி வருமாறு செய்து, இருவருக்கும் சற்று அதிகமான தொகையைக் கொடுத்திருப்பேனே!

இருமுடி என் தலையில் ஏறிய போதுதான், இன்னொரு ஏழையின் தலையில் ஏறிய சுமைகளின் பளு என் நினைவில் எழுந்தது.

எவ்வளவு பெரும் செல்வராக இருந்தாலும், ஐயன் சந்நிதானத்திற்கு வரும்பொழுது தலையில் இருமுடியைச் சுமந்து கொண்டு

தான் வர வேண்டும் என்னும் நியதி இருப்பது, மற்றவர் சிரமத்தை அவர்களும் உணரவேண்டும் என்னும் தத்துவத்தை உணர்த்துவதற்காகத்தான் இருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. எவராக இருந்தாலும், எத்தனை கோடிச் செல்வத்திற்கு அதிபதியாய் இருந்தாலும், இருமுடியைச் சுமந்து பதினெட்டுப் படிகளைக் கடந்துதான் ஐயன் சந்நிதிக்கு வரவேண்டும். இதற்கு மாற்று வழியே இல்லை. இதைப் பார்க்கின்ற பொழுது, வேறுபாடற்ற-சமநிலையான-சமதர்ம சமுதாயத்தின் மாபெரும் காவலராக - கண் கண்ட தெய்வமாக-ஐயப்பசுவாமி தான் விளங்குகிறார் எனத் திடமாகச் சொல்லலாம்.

பொன் செய்யும் மருந்து

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, சைக்கிளில் சென்றேன். அதன் பின்பு மலேசிய நாட்டில் இருந்தபோது சிறிய கார் ஒன்றை வாங்கி உபயோகித்தேன். அதன் பிறகு பெரிய கார் ஒன்று வாங்கினேன். அதைத் தொடர்ந்து ஏர் கண்டிஷன் கார் ஒன்று வாங்கலாமா என்று சிந்தித்தேன்.

மனிதனுடைய ஆசைக்கு அளவே இல்லை. மீண்டும் சைக்கிளில் போகும் நிலை எற்பட்டால், சிறிய கார் கிடைத்தால் போதும் என மனம் ஏங்கும். அப்போது அது கிடைத்தால் பேரின்பமாகத் தோன்றும்.

மனப் பக்குவம் என்பது, துன்பங்கள் தோன்றுகின்ற பொழுது தான் ஏற்படுகிறது. நினைத்தது நடந்து கொண்டே இருந்தால், நாம் நினைப்பனவெல்லாம் எப்பொழுதும் நடக்கும் என்னும் கருத்து மனத்தில் வலிமைபெற்று விடுகிறது. பணியாளர் பலரை வைத்துக் கொண்டு நாம் சுகமாகவே வாழ்ந்து கொண்டிருந்தால் 'உலக வாழ்க்கையில் சிரமம் என ஒன்று இருக்கிறது; அந்தச் சிரமத்திற்கு ஆளாகிப் பலர் தவிக்கிறார்கள்' என்னும் எண்ணமே தோன்றுவதில்லை.

இதற்கு வழிதான் என்ன? உடல் நலமாக இருக்கும்போதே சில வகை நோய்கள் ஏற்படாமல் இருக்கத் தடுப்பு ஊசிகள் போட்டுக் கொள்கிறோம் அல்லவா? அது போல, நாமே சில துன்பங்களை-நியதி நியமங்களை ஏற்படுத்திக் கொள்வதுதான் தக்க வழி.

இதற்குப் பெருந்துணை புரிவன சபரிமலை யாத்திரை; ஐயப்ப சுவாமியின் அற்புதமான விரதங்கள்.

மெத்தை, தலையணை முதலியவற்றைப் பயன்படுத்தாது படுத்துறங்கி, செருப்பு இன்றி நடந்து, கருநிற ஆடை அணிந்து, முடி வளர்த்து, இருமுடியைத் தலையில் சுமந்து கொண்டு நாற்பது மைல் நடந்து சென்று. பதினெட்டுப் படிகளைக் கடந்து, ஐயனைத் தரிசித்து வரும்போது, 'இதற்கு மேல் எதுவும் வேண்டாம்; இப்பொழுது கிட்டும் சுகம், இருக்கும் சொத்து எப்பொழுதும் இருந்தால் போதும்' என மனம் பக்குவமடைகிறது. இருமுடி தாங்கி மலைவழி செல்லும்போது ஏற்படும் அனுபவங்கள், வாழ்க்கையில் சிரமப்படுபவர்களைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்கின்றன.

தம்மினும் வசதி மிகுந்த செல்வர்களைப் பார்த்து ஏங்குவதைக் காட்டிலும் தம்மினும் வசதி வாய்ப்புக் குறைந்தவர்களைப் பார்த்து, 'இந்த நிலையிலேனும் ஆண்டவன் நம்மை வைத்திருக்கிறாரே!' என மன நிறைவு கொள்ள வேண்டும்.

அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் அங்குள்ள மக்கள்,

எல்லா இன்பங்களையும் அனுப வித்த பிறகும் மனநிறைவு ஏற் படாமல், 'மேலும் இன்பம் கிட்ட வில்லையே!' என எண்ணி, ஹிப்பி களாகிப் போதைப் பொருள் களுக்கு அடிமையாகிறார்கள்.

போதும் என்ற மனம் இல்லா மையே இது போன்ற அவல நிலைக்குக் காரணம்.

இது பற்றி எண்ணுகின்ற பொழுது, அமெரிக்காவில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி என் நினை விற்கு வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரூமனை அவர் நெருங் கிய நண்பர் ஒருவர் பார்க்க வந் தார். ட்ருமன் கவலையோடு இருப்பதைக் கண்டார். ''பதவி களுள் உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவி கிடைத்தும் ஏன் கவலையாக இருக்கிறீர்கள்?'' என்று அந்த நண்பர் கேட்டார். அதற்கு, ''ஒவ்வொருவரும் 'இனி யும் நமக்குப் பதவி உயர்வு இருக் கிறது' என எண்ணும்போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆனால், எனக்கு இனிப் பதவி உயர்வே இல்லையே! அதை நினைக்கும்போது கவலையாகத் தான் இருக்கிறது'' என்று ட்ரூமன் சொன்னார்.

இந்த நிகழ்ச்சி, யாருக்குமே மேலும் மேலும் வேண்டும் என் னும் அவா இருக்கிறது என்ப தையே படம் பிடித்துக் காட்டு கிறது.

நம் ஐயப்ப சுவாமியின் தத்து வம், இருக்கும் சுகங்களைக் குறைத்துக் கொண்டு, இருப்பதே நிறைவானது எனப் பேரின்பம் கொள்ளச் செய்வது.

'போதும் என்ற மனந்தான் பொன் செய்யும் மருந்து' என்பது பெரியோர் மொழி. அந்தப் பொன் மொழியை உண்மை மொழி ஆக்குவன ஐயப்ப சுவாமி யின் தத்துவங்கள்.!

(வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் எழுதிய ''ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்'' என்ற நூலிலிருந்து)

தாலாட்டு...

தாலாட்டுப் பாடல்கள் நம் ஆச்சிகளுக்கே உரித்தான கலை. அந்தச் சிறப்புமிகு தாலாட்டுக் களைப் படித்து இன்புறவும் அதைத் தங்கள் வீட்டு மழலைகளைத் தூங்கச் செய்யப் பயன்படுத்திக் கொள்ள வும் ஏராளமானவர்கள் ஆவலாக உள்ளனர் என்பதை நாங்கள் சென்ற இடங்களில் தெரிந்து கொண்டோம். எனவே 'தாலாட்டு' என்ற தலைப்பில் நம் இதழ்களில் தாலாட்டுப் பாடல்களை வெளியிட விரும்புகிறோம். தாலாட்டில் ஆர்வம் கொண்டவர்கள் எழுதி யனுப்பி வையுங்கள். 'பாடத்தான் தெரியும்; எழுதத் தெரியாது' என்ற நிலையில் உள்ளவர்கள் தங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரிவித்தால் எங்கள் பிரதிநிதி தங்களைச் சந்தித்து குறிப்பெடுத் துக் கொண்டுவந்து, அதை வெளி யிடச் செய்வார்.

— ஆசிரியர்

புதுமைகள் பலவிதம்

நூல் நிலையங்களிலிருந்து இரவல் வாங்கிப் படிப்பது போல மிருகங்களையும் இர வல் வாங்கி வளர்க்க ஏற் பாடுகள் செய்துள்ளார்கள். பாம்பு முதல் பூனை வரை எல்லாமே கட்டணத்திற்குத் தக்கபடி இரவலாகக் கிடைக் கின்றன. எங்கே தெரியுமா? அமெரிக்காவில் தான்!

— சொ. விஸ்வநாதன்
ஆவினிப்பட்டி

அடையாளப் பெயர்கள்

(நவம்பர் 1982 இதழில் 'அடையாளப் பெயர்கள்' என்ற தலைப்பில் தேவகோட்டையில் உள்ள சில வீடுகளின் அடையாளப் பெயர்களை வெளியிட்டிருந்தோம். அதனைத் தொடர்ந்து எமக்குப் பல ஊர்களிலிருந்தும் அடையாளப் பெயர்களைக் குறிப்பிட்டுக் கடிதங்கள் வந்துள்ளன. எல்லாவற்றையும் ஒரே இதழில் வெளியிட்டு வாசகர்களின் பொறுமையைச் சோதிக்க விரும்பாததால் இந்த இதழில் சிலவற்றை மட்டும் வெளியிட்டிருக்கிறோம். மற்றவைகள் அடுத்தடுத்த இதழ்களில் வெளிவரும்.)

நவம்பர் இதழில் எங்கள் ஊர் (தேவகோட்டை) சின்ன அருணசலம் அவர்கள் 19 அடையாளப் பெயர்களை மட்டுமே குறிப்பிட்டிருந்தார்கள். அவற்றில் மேலும் சில :

மாங்குடியார் வீடு
காரைக்குடியார் வீடு
கள்ளிக்கோட்டையார் வீடு
வித்ராவயலார் வீடு
கிழவஞ்செட்டியார் வீடு
யாழ்ப்பாணத்தார் வீடு
பெர்லின் காசிச் செட்டியார் வீடு
எடைப்பாடியார் வீடு
அப்பு லெ. வீடு
காங்கயத்தார் வீடு
பாட்டுக்கார ராமன்-
செட்டியார் வீடு
பட்டணம் அழகப்ப
செட்டியார் வீடு
அம்மாப் பேட்டையார் வீடு
கோபி லெ. வீடு
பவானியார் வீடு
பில்லூர் ஜமீந்தார் வீடு
மார்க்கெட் ராம. வீடு
குஞ்சாவடியார் வீடு
வள்ளிச் செட்டியார் வீடு
தண்ணீர்ப் பந்தலார் வீடு
பஞ்சாப் லெ. வீடு
சின்ன வடுகன் செட்டியார் வீடு
செக்கடி ராம. வீடு
நெல்லி மரத்தார் வீடு
தெற்கு வீடு
கருதாவூரணியார் வீடு
கண்ணுடியார் வீடு
செங்கல்பட்டு சேதுராமன்
செட்டியார் வீடு
வயிநாகரம் ராம. வீடு
கொர்ணுக்கல் ராம. வீடு
ஆலம்பட்டார் வீடு
வங்காள ராமன் செட்டியார் வீடு
சிங்கப்பூர் சேக்கப்ப
செட்டியார் வீடு
ரெங்கூன் சீனிச் செட்டியார் வீடு
சினிமா சோம. வீடு
சினிமா தெவராயன்
செட்டியார் வீடு
பரங்கிக்காய் ஆதப்ப-
செட்டியார் வீடு
ராவாண்டைக்காரர் வீடு
உதையாச்சியார் வீடு
ராங்கியத்தார் வீடு
தஞ்சாவூரார் வீடு

மூளையின் மூளை

ஒரு மனிதனின் மூளை ஏறத்தாழ மூன்று பவுண்டிற்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஆண்களின் மூளை, பெண்களுடையதை விட ஒரு சில அவுன்ஸ் எடை கூடுதலானது. புத்திசாலித் தனத்திற்கும் மூளையின் அளவிற்கும் சம்பந்தமில்லையாம். முட்டாளாக இருப்பவனுக்கு பெரிய அளவில் மூளை இருக்குமாம்.

—சொ. விஸ்வநாதன்
ஆவினிப்பட்டி.

மிஷின்காரர் வீடு
பியாப்பம் அரு. வீடு
சிந்தாமணி அழகப்ப-
செட்டியார் வீடு
தாப்பா நாச்சியப்ப-
செட்டியார் வீடு
ஆண்டான் செட்டியார் வீடு
தோல்க் கடையார் வீடு
பக்ரிபெட்டி மெ. வீடு

— எஸ். சோமசுந்தரம்
மதுரை.

வெற்றியூரில் உள்ள சில நகரத்தார் வீடுகளின் அடையாளப் பெயர்கள் :-

மடத்து ராமன் செட்டியார் வீடு
மேல வீடு
கீழ வீடு
ஆரியன் செட்டியார் வீடு
கோட்டக் கதிரேசன்-
செட்டியார் வீடு
ஈரோட்டுச் செட்டியார் வீடு
பெரிய செட்டியார் வீடு
கோயில் செட்டியார் வீடு
கிழவஞ்செட்டியார் வீடு

— எம். கே. காசிஸ்வரன்
மதுரை.

கீழச்சிவல்பட்டியில் உள்ள சில நகரத்தார் வீடுகளின் அடையாளப் பெயர்கள் :-

தண்ணீர்ப் பந்தலார் வீடு
செய்கோன் மு. வீடு
பாக்கு மரத்தார் வீடு
இடி தாங்கி வீடு
ஊரணிக்கரையார் வீடு
சூரந்திருநாள்க்கார வீடு
மூங்கில் கடையார் வீடு
அல்வாக்கார வீடு
நெல்லி மரத்தார் வீடு
உண்டியக் கடையார் வீடு
பிள்ளையார் பட்டியார் வீடு
ரேடியோ கரு. வீடு
மயில் ராம. வீடு
வட்டா ஊரணி சோம. வீடு
கொட்டகைக்கார தே. வீடு

—மு. கரு. விஸ்வநாதன்
கீழ்ச்சிவல்பட்டி

அறிமுகமும் பாராட்டும்

டாக்டர் இராம. சுந்தரம்

சிவந்த மேனி; நெடிய தோற்றம்; ஆரவார மற்ற பேச்சு; இனிமையாகப் பழகும் சுபாவம்–இவர் தான், டாக்டர் இராம. சுந்தரம்.

இவர் 1—4—1938 இல் அலவாக்கோட்டையில் பிறந்தவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று எம். ஏ. (தமிழ்) பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்ருர். பின்னர், இவர் கேரளப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் ஆய்வு நிகழ்த்தி, டாக்டர் (Ph. D.) பட்டம் பெற்ருர். மேலும் மலையாள மொழி பயின்று, அதற்குரிய பட்டயத் தேர்வில் (Diploma) முதல் வகுப்பில் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் கேரளப் பல்கலைக் கழகத்தில் ஒன்பது ஆண்டுகள் ஆராய்ச்சி உதவியாளராகவும், அங்கேயே பல ஆண்டுகள் விரிவுரையாளராகவும் பணியாற்றியிருக்கிருர்.

படைப்பாளர்

'சொல் புதிது, சுவை புதிது' என்ற நூலையும், மொழியியல், இலக்கணம், இலக்கியம் பற்றிய நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் இவர் படைத்துள்ளார்.

போலந்தில் தமிழ்ப் பேராசிரியர்

போலந்து நாட்டிலுள்ள வார்சா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இவர் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பொழுது, திருக்குறளைப் போலந்து மொழியில் மொழி பெயர்க்கப் பெருந்துணையாக இருந்தார்.

சிதம்பரத்தில்..

1979-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், திரு. சுந்தரம், அண்ணுமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறையில் துணைப் பேராசிரியராக (முதற் கட்டமாக) இரண்டாண்டுகள் நியமிக்கப் பெற்ருர். அந்தக் காலக்கெடு முடிவடைந்ததும் இவருடைய பதவி உறுதி செய்யப்படவில்லை.

தஞ்சையில்...

எனினும், இவருடைய திறமையை நன்கறிந்த பல நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் இவருக்கு வேலை வாய்ப்பளித்திட முன் வந்தன. அமைதியான இயல்பு படைத்த இவர், எந்த வேலையையும் அவசரப்பட்டு ஒப்புக்கொள்ளவில்லை. அவ்வேளையில்



தமிழ்நாடு அரசு தஞ்சையில் நிறுவிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சிப் பணிகள் துறையின் (Director of Planning and Development) இயக்குநராக நியமனம் பெற்று 5—11—1981 முதல் நற்பணியாற்றி வருகிருர்.

தமிழில் பொறியியல், மருத்துவம் ஆகியவற்றைக் கற்பிப்பதற்குத் தேவையான நூல்கள் வெளிவர, இவர் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து ஆவன செய்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

நகரத்தாரே, சிந்தியுங்கள்!

சிறுகூடல்பட்டியைச் சேர்ந்த டாக்டர் வி. எம். பழனியப்பன் அவர்கள் நமது சமூகத்தில் நடைபெறும் திருமணம் மற்றும் கொடுக்கல் வாங்கல் முறைதலைகளால் நம்மவர்களில் நடுத்தர ஏழை மக்கள் படும் துயரத்தைக் காணச் சகியாது 'நமது பெண்களுக்குத் திருமணம் செய்விப்பது எப்படி' என்ற தலைப்பில் விளக்கமான ஆய்வுக் கட்டுரை ஒன்றைத் தயாரித்து பிரதிகள் எடுக்கச் செய்து மலேசியா மற்றும் நம் செட்டி நாட்டில் விநியோகம் செய்து அதன் மூலம் நல்வழிக்கு வித்திட்டிருக்கிறார்கள்.

அதில் ஏராளமான சீர்திருத்தக் கருத்துக்கள் உள்ளன. சில உண்மைகளை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். உண்மையானவற்றிலும் பிரச்னைக்குரிய, விவாதத்திற்குரிய கருத்துக்கள் என்று நினைத்ததை மட்டும் நீக்கி விட்டு நம் சமூக முன்னேற்றத்திற்குத தேவையானதை மட்டும் இங்கு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

—ஆசிரியர்.

● ''நம் சமூகத்தில் திருமணங்கள் ஒழுங்காக நடைபெறுமல் வீட்டுக்கு வீடு பெண்கள் தங்கிப் போகும் நிலைமை ஏற்படுமானால் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் ஏற்படத் தக்க விளைவுகள் மிகவும் ஆபத்தானதாகவே முடியும். இந்தச் சமூகம் கெட்டு விடாமல் இருக்க வேண்டுமானால் படித்த இளைஞர்கள் தியாகம் செய்துதான் ஆக வேண்டும்.''

மலேசியாவில் 'தீபாவளித் திருநாள்' விழாவில் முரு.பழ. இரத்தினம் செட்டியார் கூறியது.

● ''அந்தக் காலத்தில் இராய. சொ., சொ. முருகப்பா, பிச்சப்பா சுப்பிரமணியம் போன்றோர் தொடங்கித் தோற்றுப் போன ஒன்றே இந்தத் தொல்லை மிகுந்த சமூகச் சீர்திருத்தம். இராய. சொ. நச்சாந்துபட்டி வீதிப் புழுதியிலே படுத்து மறியல் செய்தார். ஆனால் அவரைத் தாண்டியவாறு மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். அவரது மறியல் தோற்றது.''

—முரு. பழ. இரத்தினம் செட்டியார்

● ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் பழக்கம் நமது சமூகத்தினரிடையே கொஞ்சம் கூடக் கிடையாது. மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்களை நமது சமூகத்தினர் கைதூக்கி விடுகிறார்கள். ஆனால் நம்மவர்களை, நம்மவர்களே கைதூக்கி விடமாட்டார்கள்.''

—முரு. பழ. இரத்தினம் செட்டியார்

● ''பணம் படைத்தோர்-இல்லாதார் என்ற இருவகை நகரத்

தாங்களிடையே, திருமணங்கள் நடைபெற்றால்தான் சமூகத்தின் சராசரி செல்வ நிலையும் வாழ்க்கை வசதியும் உயரும். இதற்குப் பணம் படைத்தோரிடையே தீவிர மனமாற்றம் ஏற்பட வேண்டும்: வசதியற்றோருடைய பெண்களைக் கொள்ளுவதும் அத்தகையோரது பிள்ளைகளுக்குத் தங்களுடைய பெண்களைக் கொடுப்பதுமாய் அமைய வேண்டும்.''

ஒரு பேட்டியில்
முருகு சுப்பிரமணியம்

● சீதனம் கொடுக்கும் பழக்கம் இலங்கையர், பிராமணர், கோமுட்டிச் செட்டியார் போன்ற மற்றவர்களிடையே இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் தனவைசிய நகரத்தார்களைத் தவிர வேறெந்த இனத்தவரிடையேயும் 'மாமியார் சாமான்' வாங்கும் பழக்கம் கிடையாது.

● திருமணத்திற்குப் பிறகு ''நீங்கள் தந்தது போதாது'' என்று சொல்லி மேலே விழுந்து பிடுங்குபவர்களும் ''நீங்கள் கேட்பதையெல்லாம் தருகிறோம்'' என வாய் நிறையக் கூறி விட்டுப் பின்னர் கதையை மாற்றுபவர்களுமாகச் சிலரும் நம்மிடையே இருக்கிறார்கள்.

● செட்டி நாட்டுக் கிராமங்களில் தத்தம் வீடுகளில் உள்ள புல்லைக் கூடப் பிடுங்காது துண்டு போர்த்திக் கொண்டும் வேளை தவறாமல் சீட்டுப் போட்டுக் கொண்டும் இருக்கும் சுகவாசிச் செட்டியார்கள் தம் பெண்களை ஐம்பது, அறுபது வயதிற்கும் மேற்பட்டோருக்கு- தம்மை விட மூத்த வயதுடைய செட்டியார்களுக்கு இரண்டாந் தாரமாக அல்லது மூன்றாம் தாரமாகக் கட்டிக் கொடுக்கிறார்கள்.

● சீதனம் கொடுப்பது நன்மையான ஒன்றுதான். ஆனால் மனைவிக்குக் கொடுக்கப்படும் இந்தச் சீதனத்தைக் கணவன் கை வைப்பது மிகக் கேவலமான செயலாகும்! அது மனைவியை ஏமாற்றுவதற்கு ஒப்பாகும்.

● ''மாமியார் சாமான் வாங்குபவர்கள் கேவலமானவர்கள்'' என்று தூற்றும் பழக்கத்தை, வழக்கமாக்கிவிட்டால் அது வாங்குவதும் கொடுப்பதும் குறைந்து விடும். அதோடு மற்றவர்கள் கொடுத்த மாமியார் சாமான்-சீதனம் எவ்வளவு என்று விசாரணை செய்வோரும் கீழ்த்தரமானவர்கள் என்று பிரசாரம் செய்யப்பட வேண்டும்.

● நீங்கள் பல பெண்களைப் பெற்றவராக இருக்கலாம். பல பெண்களுக்குக் கொடுத்துக் கொடுத்து நலிந்துபோய் இருக்கக்கூடும். ஒரு முறையாவது வாங்க வேண்டுமென்ற உங்கள் உணர்வில் எந்தத் தவறும் கிடையாது. ஆயினும் கூட 'எங்களுக்கு மாமியார் சாமான் தொகையும் வேண்டாம்; சாமானும் வேண்டாம் என்று சற்றுப் பெருந்தன்மையாகக் கூறிக் கொஞ்சம் தியாகம் பண்ணுங்கள். சமூகம் உங்களுக்கு நன்றிக் கடன்படும். மனங் குளிர்ந்த உங்கள் சம்பந்தியின் வாழ்த்துரை இறைவனது காப்புரையாகும்.

பஸ் டிரைவர்: (காரின் குறுக்கே விழுந்தவனிடம்) என்ன தம்பி வீட்டில் சொல்லிக்கொண்டு வந்து விட்டாயா?

பையன்: ஐய்யய்யோ ... மறந்தே போச்சு. கொஞ்சம் இருங்க .... வீட்டிலே சொல்லிக்கொண்டு வந்து விடுகிறேன்.

—பழ. கருத்தான்
குருவிக்கொண்டான்பட்டி

மதுவும் மன்னர் பின்னேரும்

வேந்தன்பட்டி அழ. சோமசுந்தரம்

தனிமனித நலத்திற்கும் சமூக ஒட்டுமொத்த நலத்திற்கும் வேறு பாடு சிறிதும் இல்லை. சமூகம் ஒரு மரமென்ருல்தனிமனிதன் ஒருகிளை யோ அல்லது இலையோ ஆவான். பல தனிக் குடும்பங்கள் ஒரு சமூக மாகிறது. தனிமனிதன் சமூக நல னிற்கு ஊறுபாடான எதனையும் செய்தலாகாது என்பது அறவோ ரால் வலியுறுத்தப்படும் கொள்கை யாகும். பிடிக்கிறதோ இல்லையோ பல சமயங்களில் அவன் சமூகப் பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட வேண்டியே வருகிறது.

மது அருந்துவது அறவோரா லும் சமுகத்தின் பெரும்பான்மை மக்களாலும் பழிக்கப்பட்டே வந் திருக்கிறது. பெரும்பான்மை மக் களால் தவறு என்று வலியுறுத்தப் பெற்ற தொழில்களைச் செய்யா திருப்பது நகரத்தார் நல்மரபு என் ருல் அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. சாதி-சமய-இன வேறுபாடின்றி மற்றவர்கள் நமது அறவாழ்வினை, ஒழுக்கத்தை, மொழிப்பற்றை, வணிகத் திறனை, விருந்தோம்பும் பண்பை, சமயப் பொறையை. கலை உணர்வை, கல்வி வளர்க்கும் பாங்கை, நேர் மையை, உழைப்பைப் பாராட்டி வருகிருர்கள். இத்தகையஏகோ பித்த பாராட்டை நாம் எங்கணும் பெரும் வகையில் நமக்கு நற்பெய ரெனும் சொத்தை மிகுந்த தவம் செய்து தேடி வைத்துள்ளனர் நம் முன்னேர். அவர்களுக்கு மன மொழி மெய்களால் நன்றி கூறு வோம்.

தமிழ்ப்பெருநாட்டின் அச்சாணி யாக விளங்கி நற்தொழில்களையே செய்து மன்னர் பின்னேராய் வாழ் ந்து வரும் இம்மரபில் தோன்றிய சிலர், பொருள் ஆக்கங்கருதி மது பான வணிகத்தில் ஈடுபட்டுள்ள தைக் காண மனம் வேதனைப் படு கிறது. தனிமனித உடல் உள நல னிற்கும் சமூக நலனிற்கும் மா பெரும் தீங்கை விளைவிக்கும் மது வை நாம் தொழிலாகக் கொள்ள லாமா?

காலங்காலமாக சான்ருேர்க ளால் பழிக்கப்பட்டுவருவதும் ஐம்

மாம்பழம்

மாம்பழத்தில் வைட்டமின் 'சி' அதிகம் உள்ளது. இது இதய நோயாளிகளுக்கு நன்மை தருகி றது; தலைவலி, பார்வைக் குறை வைப் போக்குகிறது; வாதம், பித்தத்தைக் கட்டுப்படுத்துகிறது. மாம்பழச்சாறில் சுக்கைத் தட்டிப் போட்டுச் சாப்பிட்டு வந்தால் மயக்கம், களைப்பு ஏற்படாது.

— தே. சுப்பிரமணியன்

பெரும் பாவங்களில் ஒன்ருனதும் மது. தான் கெட்டாலும் இன்ஞெருவர் கெட்டு விடக்கூடாது என்னும் அறமுரசு ஆர்த்த நகரத்தார் இத்தொழிலை மேற்கொள்ளுதல் சரியாகாது. இலாபம் அதிகம் ஈட்டலாம் என்பது நோக்கமென்ருல் இலாபம் அதிகம் ஈட்டும் வேறு தொழில்களே இல்லையா?

நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலும் எந்நாளிலும் அரசாலும் எல்லாத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் தொழிலாக இருக்க வேண்டும். பழிதூற்றும் தொழில் எந்நாளும் சீராக நடைபெற்றுவரும் என்று சொல்ல இயலாது. உதாரணத்திற்குக் கொடுக்கல்-வாங்கல் தொழிலையே எடுத்துக்கொள்ளுங்களேன். அது பழிக்கப்பட்டு இப்போது நசுங்கியே போய்விட்டது.

மதுவை விற்பது என்பது சமூகத்திற்குத் தீங்கு என்பது மட்டுமல்ல. மெதுவாக அது குடும்பத்தாரையும் சுற்றத்தாரையும் பற்றிக் கொண்டு நல்வாழ்வையும் அமைதியையும் இழக்க வைத்து விடும்.

குறைவான இலாபம் கிடைத்தாலும் சமூகத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன் தரும்-நலந் தரும் தொழில்களையே நாம் செய்துவந்தால் தொழில் எந்நாளும் நடைபெறும். நாளாக ஆக அது ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூடும். அரசாலோ — தனிமனிதனுலோ அதற்கு ஊறு ஏதும் ஏற்படாது. அப் பலன் கருதாச் சுதர்மம் நமக்கு பொருள் தரும். உடல்-உள-ஆன்ம நலந் தரும். நல்ல நண்பர்களைப் பெருக்கும். அறவழி காட்டும். ஆனந்தம் தரும்.

வைதாலும் வாழவைப்போர்

'அரசளுவா மகன், அரசளுவா மகள்', என்பவை நகரத்தார் கூறும் வசவு மொழி. கோபமாகவோ, குத்தலாகவோ வைது கூறும் இம்மொழி ஆழ்ந்த பொருள் உடையது. பண்பாட்டிற் சிறந்த நகரத்தார் வைதாலும் வாழவே வைப்பார்கள் என்பது இதனுல் தெரியவருகிறது. அரசர்க்கு அடுத்த சிறப்புடையவராய், - 'மன்னர் பின்னோராய்' வாழும் நகரத்தார் தமக்கு என வணிக அரசினை உடையவர்கள். அதனுல் அவர்களும் 'அரசு ஆள்வோராக'ச் சொல்லப்படுவர். 'Merchant-king' என்ற ஆங்கிலச் சொல்லையும் காண்க. அத்தகைய அரசாளுவார் மகன், மகள் என்பவைதாம் அரசளுவா மகன், மகள் என மருவி வந்துள்ளன. அரசாள்வார் மக்கள், பிறர் பழிக்குமாறு நடந்துகொள்ளக் கூடாது என்பதே இதன் பொருள். இங்ஙனம் வைதாலும் வாழவைக்கும் நகரத்தார் நாகரிகம் நயத்தக்கது.

—"குருந்து"

உலகிலேயே நீளமான பிரகாரம்!

உலகிலேயே மிகப் பெரிய கோவில் சுற்றுப் பிரகாரம் எது தெரியுமா? இராமேஸ்வரத்திலுள்ள இராமனுத சுவாமி கோவிலின் சுற்றுப் பிரகாரம் தான்!

நீளம்: 1200 மீட்டர்கள்

—வி. ஆர். சின்னஅருணசலம் தேவகோட்டை

முறைதலை

'எவர்பிரைட்' நாச்சியப்ப செட்டியார்

நமது நகரத்தார் நடத்துகின்ற திருமணம் போன்ற விசேடங்களில், 'சீர்திருத்தம் வேண்டும்', 'சிக்கனம் வேண்டும்', 'ஆடம்பரச் செலவைக் குறைக்க வேண்டும்' என்றெல்லாம் கூறுகிறார்கள். அது போல, மாமியார் சாமான் வேண்டாம்; அது வேண்டாம்; இது வேண்டாம் என்று பலரும் எழுதியும், பேசியும், கூட்டம்கூடி கட்டு வைத்து விட்டு ஒன்றும் எடுபடாத நிலையில் உள்ளனர். நானும் எனது சங்கை ஊதுகிறேன். எனது சங்க நாதமும் அந்த வகையிலே சேர்ந்துவிடாது, பயன்படும் என நினைக்கிறேன்.

பிற இனத்தாரும் திருமணம் செய்கிறார்கள். நகரத்தார் பெருமக்களாகிய நாமும்தான் திருமணம் செய்கிறோம். அவர்கள் தங்கள் தங்கள் சக்திக்கேற்பச் செலவு செய்து ஒரு திருமணத்தை நடத்தி முடிக்கிறார்கள். நாமோ நமது சக்தியையும்மீறி ஆடம்பரத்திற்காட்பட்டுச் செலவு செய்கிறோம். குறிப்பாகச் சொன்னால் எந்த ஒரு இனத்தாரும் வழக்கத்திற்கொள்ளாத "முறைதலை" என்கிற பெயரால் முறையற்ற செலவுகளைச் செய்கிறோம். எது ஒழுங்காகவும் நியாயமாகவும் இருக்கிறதோ அதற்குப் பெயர்தான் "முறை". ஆனால் நமது ஆச்சிமார்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிற இந்தக் கொடுக்கல் வாங்கல் வணிகத்திற்கு "முறைதலை" என்று எந்த மேதை வைத்தாரோ தெரியவில்லை. இதற்கு 'முறைச்சிட்டை' என்று வேறு சொல்லி ஒரு சிட்டை எழுதி மஞ்சளும் தடவி வைத்துக்கொள்கிறோம். ஆனால் இது தலைமுறை தலைமுறையாக வந்ததல்ல. இடையே ஏற்பட்ட இன்னற்படுத்தும் முறையற்ற சிட்டை.

பெண்ணுக்குத் (ஸ்ரீ) தனமாகத் தருவது, நகைநட்டுப் போடுவது, பாத்திர பண்டம் கொடுப்பது போன்றவற்றைத் தங்கள் தங்கள் நிலைக்கேற்பச் செய்தால் அது முறை; அது அவசியமும் கூட. ஆனால் தேவையற்றதும், பணத்தை முடக்குவதும், எப்போதோ ஒரிருமுறை அணிவதுமான கழுத்துரு, மாமியார் சாமான், சடங்குப் பெட்டிகள், வருடமுறைகள், பலகார முறைகள், அரிசி மூடைகள், விளையாட்டுப் பெட்டி வேறு இது போன்ற அளவு கடந்த கட்டாய முறைகள் அவசியந்தானா? இவை இல்லாவிட்டால் திருமணம் சிறக்காதா - நிறக்காதா? எண்ணிப் பார்க்க வேண்டும்! இதனால் நடுத்தர வகுப்பினரில் பெரும்பாலோரும் எளிய வகுப்பினரில் எல்லோரும் அண்மைக் காலமாக அல்லற்படுவதைப் பார்த்தும் நாம் வாளாவிருக்கின்றோம். நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கவும் வேண்டாம்; அவர்கள் நமக்குத் தரவும் வேண்டாம்; சிந்தித்துச் செயல்பட்டால் நம் இனம் சீர்பெறும்.

காதலன்: ஐ லவ் யு

காதலி : ஐ டூ லவ் யு

காதலன்: ஐ த்ரீ லவ் யு

காதலி : ....?



பிரதிபலிப்புகள்

வ.தேனப்பன்

வாடி வதங்கிய கீரைத்தண்டைப் போலத் தமயந்தி படுத்திருந்தாள்.

ஆப்பரேஷன் முடிந்து ஒருநாள் ஆகி விட்டது என்றாலும் அவளால் நெற்றியிலிருந்து வடிகின்ற வேர்வையைக் கூடத் துடைத்துக் கொள்ள முடியவில்லை. ஏதோ பெரிய பாறையைப் பெயர்த்து எடுப்பதைப் போலிருந்தது, அவளுடைய கையை, அவளே தூக்க முயற்சி செய்தது. அந்த முயற்சி தோல்வியைத் தழுவுவதை அவளுடைய இறுகிப முகம் காட்டியது.

''என்ன? என்ன தமயந்தி? என்ன பண்ணனும்? ஓ! வேர்வை வடியுதா? நான் துடைச்சு விடுறேன். எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லாம நீ ஏன் சிரமப்படுறே? நான் எதுக்கு இருக்கேன்?'' என்று கூறியபடியே கமலா, ஒரு துண்டை எடுத்து முகமெங்கும் துடைத்து விட்டாள்.

தமயந்திக்கு மெய் சிலிர்த்தது. இப்போது கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், அவளது கன்னத்திலுள்ள 'பணக்குழி'யில் விழுந்து ஓடியது. கமலாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''தமயந்தி .. ரொம்ப வலிக்கிறதா? ஏன் இப்படிச் சின்னப்பிள்ளை மாதிரி அழறே?'' என்று கேட்டபடி அவள் தலையை ஆதரவாகக் கோதிவிட்டாள்.

''கமலா! உன்னை மாதிரி நல்லவங்களை, உலகத்தில பாக்குறதே

சிறுகதை

இப்ப அபூர்வமாப் போச்சு. பாரேன், எனக்கு இங்கே துணையா இருக்கிறதுக்காக எம் மாமியாரும், கூடப் பிறந்த மங்கை அக்காவும்... ஒருத்தர் மாத்தி ஒருத்தரா இருக்காங்க. ஆனா ... எங்க அக்கா கூட, என் மாமியாரைப் போலவே இறுசி மட்டையா இருக்கா. தானா வந்து ஒண்ணு கூட உதவுறதில்லே, நானா கேட்டாத்தான் எதையும் தர்ரா.''

'' அப்படியா? ''

''ஆமா, நீ வந்தவுடனே ஒனக்கு, அவளா காப்பி வாங்கி யாந்து தந்திருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும். ஆனா... நான் வாங்கியாரச் சொன்ன பிறகு தான்... இப்பப் போயிருக்கா. அடி... இப்ப நீ என் வேர்வையைத் தொடச்சியே... நான் சொல்லியா தொடச்சே? இல்லியே! இதுதானே அன்புங்கிறது? காலையில... வேர்வை வெள்ளமா பொங்குது. அவ... பாத்துக்கிட்டுக் கல்லாட்டம் உக்காந்திருக்கா! ஏண்டி அவ இப்படி ராட்சசியாட்டம் மாறீட்டா?''

''அவங்க... ஏதாவது வேறே நினைப்பா... அட... தங்கச்சிக்கு முடியலையேன்னு கவலைப்பட்டிருப்பாங்க!''

''கதை விடாதேடி! எங்க அக்கா... என்னமா முந்திக் காலத்திலேயெல்லாம் உதவு வாங்க! இப்ப..''

கவலைப்படாதே தமயந்தி! நான் இருக்கேன்ல? உனக்கு வேண்டிய உதவி பண்றேன். நான் தான் தினமும் வாரேன்ல? எனக்கு நீ காலேஜிலே எவ்வளவு உதவி பண்ணியிருக்கே? பரீட்சை நேரத்திலே நான் சீரியஸா டைபாயுடுல கிடந்தப்ப, நீ தானே பக்கத்திலேயே இருந்து மருந்து மாத்திரையெல்லாம் கொடுத்துப் பாத்துக்கிட்டே? அதுனால நீ குணமாகி வீட்டுக்குப் போறவரைக்கும், தினமும் நான் வந்து பாத்துக்கிறேன். கவலைப்படாதே!'' என்று ஆறுதல் சொல்லியபடி மீனாட்சி அம்மன் கோயில் குங்குமத்தை அவள் நெற்றியில் வைத்து விட்டு மனதாரப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

''கமலா! நாம ரெண்டு பேரும் காலேஜிலே பழகுனதெல்லாம் மூணு வருஷம்தான். அதுக்கே நீ இப்படி விழுந்து விழுந்து பாடுபட்டு உதவுறபோது... இருபத்தைஞ்சு வருஷமா என்னோட பழகின அக்கா... இப்படிக் கல்லு மனசா இருக்க எப்படி முடியுது? ம்...''என்று ஏக்கமாகக்கேட்டாள்.

''நான் சொல்ல வேண்டாம்னு நினைச்சாலும் நீ விட மாட்டே போலிருக்கு !''

''என்னடி விஷயம்? எங்க அக்கா, நேத்தைக்கி ஏதாவது பத்த வச்சிட்டாளா? நான் எங்க அக்காவுக்கு எந்தக் கெடுதலுமே பண்ணுனதில்லையடி; அவ மனசு தான் கல்லாப் போச்சு!''

''பதருதே! ரெண்டுமாத்தைக்கு முன்னால அவங்க ஊருக்கு உன் மகனோட போயிருந்தியா?''

''ம்... ஆமா, அதுக்கென்ன?''

''அப்ப... உங்க அக்காவுக்குப் பிரசவ நேரம். இடுப்பு வலி வந்து அவங்க வீட்டுல துடிச்சுக்கிட்டிருந்தபோது நர்ஸ் அவசரமா உன்னை ஒரு இன்ஜெக்ஷன் வாங்கியாரச் சொன்னாங்களா?''

''நான் அப்ப... என் மகனைக் குளிப்பாட்டிக்கிட்டிருந்தேன்''

''அவசரமா கேட்கும்போது..'

''அவசரம்தான். ஆனா... என் புள்ளைக்கு பாதி குளிப்பாட்டின தோட விட்டுட்டு ஓடினு...அதுக்கு சளிப் புடிச்சுக் காய்ச்சல் வந்திருச்சுன்னு யாரு வந்து பாப்பா? அதுனால புள்ளையைக் குளிப்பாட்டிட்டு போறேன்னேன். வேண்டாம்னுட்டாங்க''

''தமயந்தி, கொஞ்சம் யோசிச்சுப் பாரு. உனக்குச் சாதாரண ஆப்பரேஷன். இந்த ஆப்பரேஷன் முடிஞ்ச பிறகு, வேர்வையைத் துடைக்காததை நீ பெரிய தப்புங்கிறே. அக்காவுக்குக் கல்லு மனசுங்கிறே. அவங்க பிரசவ வேதனையில துடிச்சுக் கதறின போது... ஓடிப்போயி உதவாம... சாவகாசமா இருந்திருக்கே...''

'' ... ...''

'' நீ மட்டும் அந்த நேரத்தில உதவியிருந்தா... அன்னைக்கி... புள்ளை செத்துப் பிறந்திருக்காது. நீயே சொல்லு, யாரு மனசு கல்லுன்னு? இப்பத் தெரியுதா? அவங்க ஏன் இப்படி நடந்துக்கிருங்கன்னு?'' என்று ஒருவித ஆவேசத்துடன் கேட்டாள் கமலா.

வாசலில் காப்பியுடன் அனைத்தையும் கேட்டு விட்டு வந்த மங்கை அப்போதுதான் வந்தது போல லேசாகச் செருமி விட்டு உள்ளே நுழைந்தாள்.

தமயந்தியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

கமலா துடைக்கவில்லை. அவளது குற்றத்தை அவள் நன்ருக உணரட்டும் என்று விட்டு விட்டாள்.

தவறை உணர்ந்த கண்ணீர் அல்லவா, அது! எனவே தனது முந்தானையால் ஆதரவாகத் துடைத்து விட்டாள் அக்காள் மங்கை.

பத்திரம் உள்ள திருமணம்!

இன்று பகுத்தறிவாளர், திருமணத்தை வாழ்க்கை ஒப்பந்தம் என்று கூறுகிருர்கள். மணமக்கள் இவ்வொப்பந்தம் செய்து கொள்கின்றனர் என்பது அவர்கள் கருத்து. ஆனல் பகுத்தறிவுத் திருமணங்களில்கூட பத்திரம் எழுதப்பெறுவதில்லை.

நகரத்தார் திருமணத்தில் பத்திரம் எழுதிக்கொள்கின்றனர். மணமக்கள் அல்லர்; அவர்களின் பெற்ருேர்கள்! இருபால் பெற்ருேரும் தனித் த்னியே தத்தம் கோயில் உள்ள வளநாடு, நாடு ஆகியவற்றையும் தம் தந்தையர் பெயரை இணைத்த தமது பெயரையும் எழுதி, இன்னவர் மகனுக்கு, இன்னவர் மகளைப் பாணிக்கிரகணம் பண்ணுவதாயும், இன்ன சீதனம் இத்தனை அளவு என்றும் இரண்டு பிரதிகள் எழுதிக் கையெழுத்திட்டு ஒன்றைத் தாங்களும், மற்றென்றை 'எதிரி வீட்டாரும்' வைத்துக் கொள்வர். எதிர்ந்து கொள்வோர் எதிரி; பகைவர் அல்லர். இந்தப் பத்திரம்' 'இசை பிடிமானம்'' எனப்படும். கட்டாயப்படுத்தாமல் இசைந்து எழுதிக்கொள்ளும் பிடிமானம் ஆதலின் இசைபிடிமானம் எனப்படுகின்றது. பிடிமானம் என்பது பத்திரம் (Deed). எனவே பத்திரம் உள்ள திருமணம், நகரத்தார் திருமணமே.

—''சூருந்து''

ஸ்ரீ முருகன் துணை உ ஸ்ரீ ஐயப்பன் துணை

சபரிமலைப் பிரயாணம்

(1)	12-12-82 To 14-12-82	3 நாள்	ரூ.	140
(2)	17-12-82 To 19-12-82	3 நாள்	ரூ.	140
(3)	17-12-82 To 20-12-82	4 நாள்	ரூ.	180
(4)	23-12-82 To 25-12-82	3 நாள்	ரூ.	140
(5)	5 - 1-83 To 7 - 1-83	3 நாள்	ரூ.	140
(6)	5 - 1-83 To 8 - 1-83	4 நாள்	ரூ.	180
(7)	11 - 1-83 To 16 - 1-83	பெரியபாதை	ரூ.	240

மூன்று நாள்:

மதுரை — குற்றாலம் — ஆரியங்காவு — குளத்துப்புழை — பந்தளம்—செங்கன்னூர்— ஆரன்முலா—எருமேலி—பம்பை—சன்னிதானம்—செங்கோட்டை—மதுரை. நாள் 3க்கு பஸ் கட்டணம், 3 வேளை ஆகாரம், மாலை இனிப்பு, காரம், காபி உள்பட நபர் 1க்கு ரூ. **140 /** 3 வயதிற்கு மேல் 10வயதிற்குள் அரைக் கட்டணம் ரூ. **80 /-.**

நான்கு நாள்:

மதுரை—பழனி—குருவாயூர் — திருச்சூர் — திருப்பரயாறு— கொடுங்களூர் — காலடி — சோட்டானிக்கரை — வைக்கம்— கடுத்திருத்தி—மதுரை. நாள் 4க்கு பஸ் கட்டணம், 3வேளை ஆகாரம், மாலை இனிப்பு, காரம், காபி உள்பட நபர் 1க்கு ரூ. **180 /** 3 வயதிற்கு மேல் 10 வயதிற்குள் அரைக் கட்டணம் ரூ. **105 /**

பெரியபாதை : மதுரை — குற்றாலம் — ஆரியங்காவு — குளத்துப்புழை—எருமேலி—அழுதை—கரிமலைமேடு—பம்பை-(ஜோதி பார்த்தல்) சன்னிதானம்—செங்கோட்டை—மதுரை நாள் 6க்கு பஸ் கட்டணம், 3 வேளை ஆகாரம், மாலை இனிப்பு காரம், காபி உள்பட நபர் 1க்கு ரூ. **240 /** 3வயதிற்குமேல் 10 வயதிற்குள் அரைக் கட்டணம் ரூ. **130 /.**

இலங்கைச் சுற்றுலா

எங்களது 15 நாட்கள் இலங்கைச் சுற்றுலா 10--2--83ல் மதுரையிலிருந்து துவங்குகிறது. பாஸ்போர்ட், விசா, கப்பல் ரயில், பஸ் கட்டணம், சாப்பாடு, தங்கும் வசதியுடன் நபர் 1க்கு ரூ. **1050/-** முன் பணம் ரூ. 250/- செலுத்தி முன் கூட்டியே பதிவு செய்ய வேண்டுகிறோம்.

உரிமையாளர்: **சொ. சுப்பிரமணியன்**

SUBAM TRAVEL AGENCY

சுபம் டிராவல் ஏஜன்ஸி

நாவுக்கரசு இல்லம்

143, வடக்குமாசி வீதி, மதுரை.



திரையுலகில் நகரத்தார்

காரைக்குடி நாராயணன்

கோயில்களைப் போல தாம் குடியிருக்கும் வீடுகளையும் கட்டிப் பார்த்தவர்கள் நம் நகரத்தார். கலையழகு நிறைந்த சிலைகளைக் கோயில்களில்தான் காணமுடியும். அந்தச் சிலைகளைப் போல தேக்கு மரங்களாலும், தேயாத தந்தங்களாலும், சந்தன மரங்களாலும் வீட்டுத் தூண்களையும், முகப்பு வாசல்களையும், முற்றங்களையும் எழிற் கோலமாக்கியவர்கள் நம்மவர்கள். இது நிலவு கோடிக்கு முன்பிறந்தவர் முதல் நேற்றுப் பிறந்தவர்வரை கண்டறிந்து மெய்சிலிர்த்த உண்மை.

செல்வத்தை ஈட்டவும், அது செல்லும் வழியெலாம் தர்மம் போற்றவும், கல்லும் கவிபாடும் இசைமேல் நாட்டம் கொள்ளவும், உலை பொங்கும் நேரமெல்லாம் ஊராரை நினைக்கவும், கலை கொஞ்சும் நேரமெல்லாம் கனி நெஞ்சம் காணவும், தெய்வீக வழிபாட்டில் தீந்தமிழைப் பேணவும் தெரிந்த சமுதாயம், நமது நகரத்தார் சமுதாயம். அந்த நகரத்தார் சமுதாயத்தில் உள்ள இத்தனை சிறப்பும் நான் பழகிய மற்ற பல சமுதாயத்தினரிடம் மொத்தமாக அமைந்ததாகத் தெரியவில்லை. இதன் காரணத்தைச் சிந்தித்ததில் எனக்குச் சில உண்மைகள் புலப்பட்டன.

மழலை பிறந்து மடியில் தவழ்ந்து குறுநகை புரியும் போதே தாலாட்டுப் பாடி தமிழமுது ஊட்டுவதை வேறெங்கும் நான் காணவில்லை. தாலாட்டு மட்டுமா? அதில்தான் எத்தனை விதமான சிந்தனைத் தூண்டுதல்கள்! கையெழுத்துப் போடத் தெரியாத ஆத்தாள் எங்கே அந்த யாப்பிலக்கணத்தைப் படித்தாள்? அவள் பாடி உறங்க வைக்கும் பாட்டில் எப்படிச் சந்தமும் நயமும் பந்து உருண்டு வருவதுபோல் சொந்தம் தேடி வந்தது? அந்தத் தாலாட்டிலே மாமனைக் கேட்கச் சொல்லி சில அறிவுரைகள்! தகப்பனைக் கேட்கச் சொல்லி சில அறிவுரைகள்! இந்தக் கலை நெஞ்சம் நம் முன்னவர் கண்ட தவமல்லவா? ஒருவர் இறந்து விட்டால் 'ஓ' என்று அழுவதை விட்டு விட்டு ஒப்பாரி மூலம் உறவையும் பிரிவையும் கண்ணீருக்கிடையே கலந்து தருகிறார்களே அந்தக் கலை நெஞ்சம் யார் தந்தது?

என் வயதுக்கு ஏற்பட்ட திரை உலக அனுபவத்தில் மூத்த கலைஞர்கள் - அதாவது 30 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து இன்று வரை புகழுடன் இருக்கும் கலைஞர்களைக் கேட்டால் அவர்கள் எங்காவது ஒரு மூலையில் செட்டி நாட்டின் சிறப்பைச் சொல்லி, அங்கேயிருந்து தங்கள் வாழ்வைத் தொடங்கி வாழ்வில் உயர்ந்திருப்பதாகச் சொல்வார்கள். இதைக் கேட்டுப் பிரமிப்படையும் நிலையில் இன்று நகரத்தாரின் திரையுலகப் பிரவேசம் உள்ளது.

திரையுலகப் பிரவேசம் என்பது ஏழு கடலைக் கடந்து எட்டு மலையை உடைத்து, ஒரு மெழுகு

பொம்மையை அக்கினி ஆற்றில் நீந்தி, கரையாமல் கொண்டு வருவதை விடக் கடினமான ஒன்று. இத்தனை இன்னல்களையும் தாண்டி திரையுலகில் நுழைந்து வெற்றிக் கொடி நாட்டிய நம்மவர்கள் பலர். அவர்களிலே நினைவில் கொள்ளத் தக்கவர்கள் ஏவி. மெய்யப்ப செட்டியார், ஏ. எல். சீனிவாசன், கவியரசர் கண்ணதாசன், மானகிரி லேனா, 'கே. டி. எஸ்.' என்று அழைக்கப்படும் கே. டி. சுப்பையா, சின்ன அண்ணாமலை, வி டி. எல். எஸ் பி. லெட்சுமணன் செட்டியார் ஆவர். இன்று எஸ்பி.முத்துராமன், பஞ்சு அருணாசலம், கே. என். சுப்பு, கே. என். லட்சுமணன், கே. என். சுப்பையா, தேவராஜ், ஜெமினி 'லேப்'பின் நிர்வாக இயக்குனர் பழனியப்பன் இராமசாமி, 'ஜெயந்தி' கனகசபை சடையப்ப செட்டியார் ஆகியோர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் படத் தயாரிப்பாளர்கள். இயக்குனர்கள், கதை, உரையாடல், பாடலாசிரியர்கள் யார் யார் என்பது நமக்கே தெரியும். இவர்களெல்லாம் தமிழ் நாட்டுத் திரையுலகில், தொழிலில் குறை காண முடியாத தூண்டா மணி விளக்குகள்.

இவர்களில்லாமல் பட விநியோகஸ்தர்களாகவும், கலையரங்க உரிமையாளர்களாகவும் நம்மவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். இவர்கள் வேறு எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அவர்களைப்பற்றி விரிவாக எழுத வேண்டுமானால் பல ஏடுகள் வேண்டும். முக்கியமாக பட விநியோகத் துறையில் பொருள் முடக்கம் செய்து திரை உலகுக்குத் தினந்தோறும் வேலை கொடுப்பவர்களில் முக்கியமானவர்கள் 'எம். எஸ். எம்.' என்று அழைக்கப்படும் எம். எல். மெய்யப்பன், உமையாம்பிகை சுப்பிரமணியன் செட்டியார். திருச்சி உடையப்பச் செட்டியார் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சுருக்கமாகச் சொன்னால் திரையுலக வரலாற்றில் நம்மவர்களைத் திரை போட்டு மறைத்து விட்டால் அது திரை உலகமல்ல; குறை உலகம். மற்ற பல தொழில்களைக் காட்டிலும் பொருள் குவிக்கும் உலகம் இது. இந்த உலகத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு சபலங்களை உதறி, தன் மூலதனத்தை நம்பித் தொழில் செய்தவர்கள் எல்லோரும் செல்வச் செழிப்பில் சிறப்புற்றிருக்கிறார்கள். இந்தத் தொழிலைக் கேவலமாக நினைக்கும் நம்மவர்களுக்கு ஒன்று கூறுகிறேன். நூற்றுக்கு நூறு இலாபம் கிடைக்கும் ஒரே தொழில் திரையுலகம் தான். இதை ஏணியாக வைத்து, ஆட்சியைப் பிடிக்க முடியுமென்றால், இதன் சக்தியை நாம் சொல்லவும் வேண்டுமா?

நாய் விற்ற காசு குரைக்காது; வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்காது. திரையுலகில் ஈட்டிய பணமும் அப்படித்தான். நம்மவர்களின் திரை உலக ஆட்சி எல்லா நிலையிலும் நம்மிடமே இருக்கும். இதை நோக்கி ஒரு கற்பனை வாதியாக, காசு சம்பாதிக்கும் முதலாளியாக, படைப்பாளராக இளைஞர் உலகம் எழுச்சியுடன் படை திரள்வது போல பரவலாக வந்து, இதுவும் ஒரு தொழில் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே என் ஆசை.

வெள்ளி யானை விருது!

பாரத சாரணர் இயக்கத்தின் மிக உயர்ந்த பரிசான வெள்ளி யானை விருதைப் பெற்ற முதல், மாநில முதலமைச்சர் யார் தெரியுமா?

நமது புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் தான்!

—வி. ஆர். சின்னஅருணாசலம்

"இனந்தான் என்கிற உணர்ச்சி இல்லையே!"

பாடுவார் முத்தப்பச் செட்டியார் பாடினர்:

''இங்கிலீசுக் கொடி பறக்கவே
இளையாத்தக்குடி சிறக்கவே
இங்கிலீசுக் கொடி இறங்கவே
இளையாத்தக்குடி கிரங்கவே''

இங்கிலீசுக் கொடி பறந்த காலத்தில் நகரத்தார்கள் வாழ்வு சிறந்திருந்தது என்பது உண்மை. ஆனல் நகரத்தார்கள் வாழ்வு சிறக்க வெள்ளை அரசு ஏதாவது ஒரு வகையில் உதவியதுண்டா என்ருல் உறுதியாக இல்லை. நகரத்தார்கள் வெள்ளை அரசிடம் எந்த உதவியும் கோரி மனுப் போட்டதில்லை. ஓர் அரசு இருக்கிறதா என்கிற உணர்வு கூட இல்லாமல் அவர்கள் அன்று வாழ்ந்தனர்.

அப்படியானல் அன்றைய வளமானவாழ்வுக்குக்காரணமென்ன? அந்தக் காலத்தில் தொலைக்கு ஒருவரை மேலாளுக்குக் கொண்டு விற்க அனுப்பினல், போன மூன்ருவது மாதத்திலேயே அவருடைய மூன்று வருடச் சம்பளத்தையும் அட்வான்சாக எடுத்துக் கணக்கில் வரவு வைத்து அதற்கும் வட்டி நடக்கும்.

இப்படி, தான் மட்டும் வாழ நினைக்காமல் தன்னைச் சார்ந்தோரும் வாழ வேண்டும் என்கிற இன உணர்ச்சி சார்ந்த பெருந்தன்மை அந்தக்காலத்தில் இருந்த காரணத்தால் செட்டி நாட்டரசர் வீடு மட்டுமில்லாமல் செட்டிநாடு முழுதுமுள்ள எல்லா வீடுகளும் பெரிதாக அமைந்தன.

இன்னும் சொல்லப் போனல் இன்று வெள்ளையன் காலத்தில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய கோடீசுவரர்கள் உருவாகி இருக்கிருர்கள். ஆனல் இன்னொரு பக்கம் வேலை கிடைக்காத நகரத்தார் இளைஞர்களும் பெருகிக் காணப்படுகின்றனர்.

ஒரு வேளை அவர்களுக்கு வேலை கொடுத்தாலும் அவர்களுக்கு மிகவும் 'நைந்த' சம்பளம் கொடுக்கின்றனர். இந்தச் சம்பளத்தில் 'வாய்க்கும் வயிற்றுக்குமாக' நம்முடைய இளைஞர்கள் வாழ்க்கையைக் கழிக்க வேண்டியிருக்கிறது. அப்புறம் எப்படிப் பெண்ணுக்குத் திருமணம் செய்வது?

தமிழ் நாட்டின் தொழில் தலைவிதியை தீர்மானிக்கும் ஆற்றல் பெற்ற செல்வர்களைக் கொண்ட ஒரு சமூகத்தின் ஒரு பகுதி நைந்து காணப்படுகிறது என்ருல் இதற்காக ஒவ்வொரு பணக்காரரும் வெட்கப்பட வேண்டாமா?

'இனத்தான்' என்கிற உணர்ச்சி பணக்காரர்களுக்கு இல்லையே!

இதுதான் நகரத்தார் சமூகத்தின் 'கிரக்கத்திற்குக்' காரணமே தவிர இங்கிலீசுக் கொடி இறங்கியது அன்று.

— வேலூரில் நடைபெற்ற வடாற்காடு மாவட்ட நகரத்தார் சங்க விழாவில் பழ. கருப்பையா.

ஒரு ஆச்சி டாக்டரிடம்:
'டாக்டர் ஐயா, எங்க செட்டியார் ரவைக்கெல்லாம் தூக்கத்திலே பேசுருக! என்னன்னு சத்தே பாருங்கய்யா!'

டாக்டர்: 'அது ஒண்ணுமில்லை ஆச்சி! செட்டியாரைப் பகலைக்குப் பேச விடுங்க!''

— பழ. கரு.

ஆசிரியர்: ''ஏண்டா இன்னைக்கி வகுப்புக்கு 'ஹெல்மெட்' போட்டுக்கிட்டு வந்திருக்கிறே?''

மாணவன்: ''நேத்து நீங்க தானே ஐயா சொன்னீங்க! நாளைக்கு நடத்துற பாடம் 'மண்டையை ஒடைக்கு'ன்னு''!

—தே. சுப்பிரமணியன்

'நகரத்தார் சிகரத்தார்'

முரு. கண்ணுத்தான், மதுரை.

இமயம் போன்ற சைவ சமயம் தழைக்கச் செய்தது நம் நகரத்தார் குலம். புண்ணிய பூமியாகிய இந்தப் பாரத மண்ணில் அதுவும் நம் நகரத்தார் வகுப்பில் தோன்றுவதற்கு நல்ல தவம் செய்திருக்க வேண்டும். சைவ நெறியும், தர்ம சிந்தனையும், இனிய தமிழும் ஒன்ருகக் கலந்து ஓடுகின்ற ரத்தம், நம் ரத்தம். நன்றே செய்தல் அதுவும் அன்றேசெய்தல் என்பது நம்மவருக்குப் பொருத்தமான ஒரு பொன்மொழி.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்றுதான் கூறியிருக்கிருர்கள். ஆனல் நம்மவர்கள் தேடிய திரவியத்தைச் சென்றவிடமெல்லாம் தெய்வத் திருப்பணிகள் செய்து புண்ணியமும் தேடிக் கொண்டார்கள். அதனல் தான் நாட்டில் எத்தனையோபேர் இருந்தாலும் 'நகரத்தார்' என்னும் பெயர் நமக்கு மட்டும் அமைந்ததோ!

செந்தில் முருகனையே உரிமை கொண்டாடி செட்டி மகனுக்கிவிட்ட பெருமையும் நமக்குத்தான். ஏட்டில் எழுத முடியாத அளவு எண்ணற்ற தர்மங்களை அன்று முதல் இன்றுவரை செய்து வருவதனல்தான் 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்' என்ருல் நல்லதொரு வரவேற்பு!

'செட்'டாக இருப்பதனல் செட்டியார்கள் என்று பெயர் வந்திருக்கலாம். அதுபோல மனை ஆட்சியை நன்கு மாட்சிமையுடன் நடத்திவருவதனல்தான் 'ஆச்சி' என்னும் பெயர் வந்ததுவோ?

வீட்டிற்கு வருபவர்களை 'வாங்க வாங்க' என்று வாய் நிறைய வரவேற்று, வயிருர உணவளித்து, வாசற்படிவரை சென்று வழியனுப்பி வைப்பதுதான் விருந்தோம்பல். அது நகரத்தாரின் நல்ல பண்புகளில் ஒன்று. சிவ பூசையும், உபதேசமும், நிறைந்த சீலமும் உடையவர்கள் நாம். பட்டப் படிப்புப் படித்தவர்கள் பலமுறை போட்டுப் பார்த்துக் கம்ப்யூட்டரின் உதவியுடன் கண்டு பிடிக்கும் கணக்கை, செட்டியார்கள் பத்தே நிமிடத்தில் வாய்க் கணக்காகச் சொல்லிவிடுவதனல் 'செட்டியார்கள் கணக்கில் கெட்டிக்காரர்கள்' என்னும் பெருமையும் நமக்கே!

இவ்வாறு நாட்டில் நல்ல பல ஆலைகள், தொழில் நிறுவனங்கள் கல்விக்கூடங்கள் அமைத்து நாளும் நன்மைகள் செய்து வருவதனல் 'நகரத்தார் சிகரத்தார்' என்னும் நல்லபெயர் நமக்கு வந்தது.

திருவெண்காட்டில் மூன்றின் மகிமை!

மூர்த்தி மூன்று
அம்பாள் மூன்று
குளம் மூன்று
விருட்சம் மூன்று
ஒரே தேங்காய் நெற்றில்
தென்னை மரம் மூன்று

—'எவர்பிரைட்'



சேலத்தில் நகரத்தார் சங்கக் கூட்டுக் கூட்டம்

நகரத்தார் சங்கங்கள், நகரத்தார் அமைப்புகள் மற்றும் நகரத்தாரில் முக்கிய புள்ளிகள் கலந்து கொள்ளும் ஒரு கூட்டுக் கூட்டத்திற்கு சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் விரிவான முறையில் ஏற்பாடு செய்திருக்கிறது. அதன்படி இந்தக் கூட்டுக்கூட்டம் 12-12-82 ஞாயிறு அன்று சேலம் சகாதேவபுரத்திலுள்ள சுழற்குழுக் கட்டிடத்தில் காலை 10மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இக் கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஒவ்வொரு சங்கத்தின் சார்பாக மூன்று பிரதிநிதிகளையும் ஒவ்வொரு நகரத்தார் அமைப்புகளின் சார்பாக மூன்று பிரதிநிதிகளையும் அனுப்பி வைக்கச் செய்யுமாறு சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நமது சமூகம் பிற்பட்ட நிலையில் இருந்தும் 'முற்பட்டோர்' என்று பட்டயம் கட்டி விடப்பட்டதன் காரணமாக, நம் சமூகத்தவர் கல்வி, வேலை வாய்ப்புகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டு சொல்லொணாத் தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் பிற்பட்டோர் யார் யார் என்று முடிவு செய்ய ஒரு குழுவைத் தமிழக அரசு நியமிக்க உள்ளது. ஆகையால் அந்தக் குழுவின் பிரதிநிதித்துவம் கோருவதற்காக ஒரு நல்ல மத்திய அமைப்பை உடனே ஏற்படுத்தியாக வேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றி விவாதித்து முடிவெடுக்கவும் கிளைச் சங்கங்களை அதிக அளவில் நிறுவுவது பற்றி ஆலோசனை செய்யவும் மற்றும் பல முக்கிய விஷயங்களைப் பற்றி விவாதிக்கவுமே இக் கூட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கூட்டுக் கூட்டத்திற்கான விரிவான ஏற்பாடுகளை சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் திரு. ஆர்எம். நாராயணன், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் திரு. எம். ஏ. எம். சுப்பு, துணைத் தலைவர்கள் திரு. ஏ. சேது, திரு. எஸ். எம். அழகப்பன், செயலாளர் திரு. எம். ஏ. கலையரசன் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

ஆசிரியர்: "நொண்டி"ன்னு எழுதச் சொன்னா ஏண்டா காலை விட்டுட்டு "நெண்டி"ன்னு எழுதினே?
மாணவன்: நொண்டிக்குத் தான் கால் இல்லையே சார்.

—பழ. கருத்தான்
குருவிக்கொண்டான்பட்டி

வேலூரில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது

வட ஆற்காடு மாவட்ட நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 7-11-82 அன்று வேலூரில் காட்பாடி கூட்டுறவு கல்யாண மண்டபத்தில், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் ஆர். எம். நாராயணன் அவர்கள், தலைவர் (எலக்ட்) எம். ஏ. எம். சுப்பு அவர்கள் ஆகியோரர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

இறைவணக்கத்திற்குப் பிறகு சங்கத் தலைவர் பி. ஆர். மெய்யப்ப செட்டியார் அவர்கள் சிறப்பு விருந்தினர்களையும், அங்கத்தினர்களையும் வரவேற்று, விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து உரை நிகழ்த்தினார்கள். துணைத் தலைவர் மு. ராம சே. இராமசாமி அவர்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள். இணைச் செயலாளர் ஏ. ஆர். திருநாவுக்கரசு அவர்கள் சங்கத்தின் துவக்கம் பற்றியும் வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவிலுக்குச் சங்கம் இதுவரை ஆற்றியுள்ள பணிகள் பற்றியும் சங்கம் நம் இனத்தவர்களுக்கு வேலூரில் செய்ய இருக்கிற பணிகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். வெளியூர்களிலிருந்து வந்து செல்லக் கூடியவர்கள் தங்கிச் செல்வதற்கு சங்கத்திற்கு ஒரு சொந்தக் கட்டிடம் தேவை என்றும் வலியுறுத்தினார்கள், விழாத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தமது உரையில் வேலூரில் சங்கத்திற்கு பொதுப்பணி செய்ய ஒரு கட்டிடம் அவசியம் தேவை என்றும் தற்சமயம் வாடகைக்கு இருந்து கொண்டு வெளி நாடுகளில் கோவில்களில் நம்மவர்கள் பொறுப்பில் இருக்கும் பணங்களை இங்கு கொண்டு வந்து நம்மவர்களுக்கு நன்மைகள் செய்யலாமென்றும் இதற்கு நமது ஐக்கியம், விட்டுக் கொடுக்கும் மனோபாவம் அவசியமென்றும் கூறினார்கள்.

பின்னர் சேலம் நகரத்தரர் இளைஞர் சங்கத் தலைவர் ஆர். எம். நாராயணன் அவர்கள் பேசுகையில் அரசாங்கத்தால் நாம் பிற்பட்ட சமூகமென அறிவிக்க அனைத்துச் சங்கங்களின் ஆதரவு தேவையென்றும் ஐக்கிய சங்கம் ஒன்று ஏற்படுவதை வலியுறுத்தியும் இதுவரை சேலம் இளைஞர் சங்கம் ஆற்றியுள்ள பணிகள் பற்றியும் கூறினார்கள். பின்னர் சிறப்

வரலாற்றில் காவிரி

தமிழ் தந்த அகத்தியரின் கமண்டலத்திலிருந்து வந்தது தான் காவிரியாறு. காவிரித்தாய் தன் தலையை மேற்குத் தொடர்ச்சி மலையில் வைத்துக்கொண்டு, காலைத் தமிழ் நாட்டுக் கடலில் நீட்டியிருக்கிறாள். எனவே 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாதவள் காவிரித்தாய்' என்று தமிழ் இலக்கியங்கள் புகழ்கின்றன. கன்னடத்துக் குடகு மலையில் பெய்த மழையால் வளஞ்சுரக்கும் காவிரித்தாய் தமிழகத்துக்குச் சொந்தம் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. இந்தியக் கங்கை நதி வங்கதேசத்திற்கு வளம் கொடுக்கிறது. ஆனால் கன்னட மாநிலம் காவிரித் தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குத் தர மறுக்கிறது.

— 'எவர்பிரைட்'

(நன்றி: செங்கோல்)

புச் சொற்பொழிவாற்றிய பழ. கருப்பையா அவர்கள் நம் இனத்தில் பெண்கள் ஆற்ற வேண்டிய பங்கு பற்றியும், சங்கங்கள் அதிகமாகத் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் பற்றியும் நமது வழக்கத்தில் உள்ள பழைய பேச்சு முறைகளை வருங்காலத்தில் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை யென்றும் அவைகளில் பொதிந்துள்ள கருத்துக்கள் பற்றியும் கூறினார்கள். நமது சமூகத் திருமணங்களில் கொடுக்கப்பட்டு வரும் மாமியார்-சாமான், முறைதலைகள் தேவையில்லை என்பதை மிக அழகாக நகைச்சுவையோடு எடுத்துக் கூறினார்கள். பின்னர் சங்க உறுப்பினர் குமாரி சாந்த குமாரி பேசுகையில் கல்வியின் அவசியம் குறித்தும், ஆண் பெண் இரு பாலரும் நன்கு கல்வி கற்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

சங்கத்தின் சார்பில் பரிசுக் குலுக்கல் நடத்தப்பட்டு பரிசு பெற்றவர்களுக்குச் சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் (எலக்ட்) எம்.ஏ.எம். சுப்பு அவர்கள் பரிசுப் பொருள்களை வழங்கினார்கள். இறுதியில் விழாத் தலைவர் முடிவுரை வழங்க சங்கத்தின் செயலாளர் என். கே. வெங்கிடாஜலம் செட்டியார் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்

வேலூர் எம். ஆர். எம். இராமசாமி செட்டியார் அன் கோ. பீரை வேட் லிட். நிறுவனம் அனைவருக்கும் பகலுணவு வழங்கியது. கூட்டத்திற்குச் சங்க உறுப்பினர்கள் மழையையும் பொருட்படுத்தாது மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் குடும்பத்தினருடன் வந்திருந்தனர். சேலம் நகரத்தார் இளைஞர் சங்கச் செயல் வீரர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

எரிச்சல்

'எல்லெஸ்'

○ நீங்கள் ஒரு முக்கிய வேலையாக அவசர அவசரமாக சைக்கிளில் அல்லது காரில் செல்கிறீர்கள். அச்சமயம் சாலையின் குறுக்கே உங்கள் முன் ஒருவர் வந்து விழுகிறார். அப்போது உங்களுக்கு ஏற்படுவது எரிச்சல்!

○ ஒரு திரைப்படத்தின் உச்சக் கட்டக் காட்சியை நீங்கள் கண்டு வெகுவாக ரசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அச்சமயம் பார்த்து மின் தடை ஏற்பட்டு படம் ஓடாமல் நிற்கிறது. அப்போது உங்களுக்கு வருவது இது!

○ உங்களுக்குத் தர வேண்டிய பணத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் தருவதாக ஒருவர் கூறுகிறார். அதை முழுமையாக நம்பி சில ஏற்பாடுகளை நீங்கள் செய்து விட்டீர்கள். ஆனால் அவர் கூறியபடி பணத்தைக் கொடுக்காமல் ஏதோ சாக்குப் போக்குச் சொல்கிறார். அப்போது உங்களுக்கு வருவது இது!

○ உங்களிடம் சில வேஷ்டிகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வேஷ்டியை திருமண வீட்டிற்குக் கட்டிக்கொண்டு செல்ல நினைத்து சலவையாளரை எதிர்பார்த்திருக்கிறீர்கள். அவரும் வந்து சேருகிறார், உருப்படிகளுடன். குறிப்பிட்ட அந்த வேஷ்டியைக் கையிலெடுத்துப் பிரித்துப் பார்க்கிறீர்கள். அது பல கைக்குட்டைகளாக காட்சி தருகிறது. அப்போது உங்களுக்கு வருவது இது!

○ நீங்கள் அவசரமாக ஒரு இடத்திற்குப் போக வேண்டியதிருக்கிறது. சிட்டிபஸ் ஸ்டாப்பில் நிற்கிறீர்கள். உங்களுக்கு வேண்டிய பஸ் வரவில்லை. அடுத்தடுத்து உங்களுக்குத் தேவையில்லாத பஸ்களே வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போது உங்களுக்கு வருவது இது!

○ நீங்கள் ஒரு கண்டக்டர். அதுவும் சிட்டி பஸ்ஸில். காலை நேரம். பயணிகள் எக்கச்சக்கமாக ஏறுகிறார்கள். இந்த நிலையில் டிக்கெட் கேட்பவர்கள் அனைவரும் முழு முழு நோட்டாக எடுத்துக் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் ஏற்படுவது இது!

○ நீங்கள் வெளியூர் போய் விட்டு வந்து களைப்புடன் படுத்துத் தூங்குகிறீர்கள். உங்கள் வீட்டுக் குழந்தைகள் உங்களை நிம்மதியாகத் தூங்க விடாமல் சப்தம் போட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றன. இந்த வேளையில் உங்களுக்கு ஏற்படுவது இது!


○ நீங்கள் ஒரு இளம் தாய். பஸ்ஸில் வெளியூர் செல்கிறீர்கள்; உங்கள் கைக் குழந்தைக்கு முன்னதாகவே தாய்ப் பால் கொடுத்து அது அழாதவாறு செய்திருக்கிறீர்கள். இருந்தும் அது பஸ்ஸில் அடிக்கடி பசியால் அழுகிறது. அப்போது உங்களுக்கு ஏற்படுவது இது!

பணம், புகழ், செல்வாக்கிற்கு வழி வகுப்பது திரைப்படத் தொழில்

கி. வெங்கடாசலம் செட்டியார் பேட்டி

திரைப்பட விநியோகம், திரையரங்க நிர்வாகம் போன்றவற்றில் நீண்ட அனுபவம் பெற்றுள்ள வரும் காரைக்குடியைச் சேர்ந்தவருமான கி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் இந்தப் பேட்டிக் கட்டுரையில் தமது அனுபவங்களைத் தெள்ளத் தெளிவாக விவரித்திருக்கிறார்கள்.

1949ல் பட வெளியீட்டு நிறுவனம் ஒன்றில் பிரதிநிதியாக, தம் திரை வாழ்க்கையைத் தொடங்கிய அவர்கள் பட விநியோகத் துறையில் இன்று பலருக்கு வழி காட்டியாகவும், படத் தயாரிப்பு, பட விநியோகம் பற்றி புள்ளி விவரங்களுடன் கூறும் கம்ப்யூட்டராகவும் இருந்து வருகிறார்கள்.



1967ல் நடைபெற்ற, தம் புதல்வர் திரு. வி. மீனாட்சிசுந்தரத்தின் திருமண விழாவில் சிவாஜி பிலிம்ஸைச் சேர்ந்த திரு. பி.என். பிள்ளை, திரு. மீனாட்சிசுந்தரம், திரு. ஏ. பி. நாகராஜன், காமிராமேன் திரு. பிரசாத் ஆகியோருடன் திரு. கி. வெங்கடாசலம் செட்டியார்.

ஏ. பி. நாகராஜன்

இவர்கள் காலஞ் சென்ற 'அருட் செல்வர்' ஏ. பி. நாகராஜ

னின் இணையற்ற நண்பர். ஏ. பி. நாகராஜன் படத் தயாரிப்புத் துறையில் இறங்கியபோது அவருக்கு முன்வந்து உதவி செய்த பலருள் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள், நடிகர்கள் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பாலாஜி, நடிகைகள் சாவித்திரி பத்மினி, சௌகார்ஜானகி மற்றும் பலருடன் நெருங்கிப் பழகியவர்கள்.

ஏவி. எம்.

படத் தயாரிப்பாளர் ஏவி. மெய்யப்பச் செட்டியார் அவர்களோடு பல ஆண்டுகள் நெருங்கிய பழக்கமுடைய இவர்கள், தமிழ் நாட்டில் திரைப்படத் தொழில் வளர்வதற்கு முக்கிய காரணகர்த்தாக்கள் என்று ஏவி. எம்., எஸ்.எஸ். வாசன், நாகிரெட்டி- சக்ரபாணி ஏ. எல். சீனிவாசன் ஆகியோரைக் குறிப்பிடுகிருர்கள்.

"நாம் இருவர்"

ஏவி. எம். "நாம் இருவர்" படத்தை ஸ்டுடியோ, நவீன படப் பிடிப்புச் சாதனங்கள், சௌகரியங்கள் இல்லாத நேரத்தில் - பணம் கிடைப்பது அரிதான நேரத்தில் - 3 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்திருப்பது பெரிய சாதனை என்றும் அவர்கள்போல் இப்போது திட்டமிட்டு, தரமான படங்களைத் தயாரிப்பவர்கள் அரிதாக உள்ளனர் என்றும் கூறுகிருர்கள்.

புரொஜக்ஷன்

"திரைஉலகில் 'புரொஜக்ஷன்' என்கிருர்களே அது பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?" என்று கேட்ட போது—

"படத்தை விலைக்கு வாங்க விரும்புபவர்களுக்கு எடுத்து



தம் புதல்வரின் திருமண விழாவில் தம் மனைவி லெட்சுமி ஆச்சி, நடிகர் ஜெமினிகணேஷ், நடிகை சாவித்திரியுடன் திரு. வெங்கடாசலம் செட்டியார்.

முடித்த வரையில் சில காட்சிகளை தனியாக திரையில் போட்டுக் காட்டுவதற்கு 'புரொஜக்ஷன்' என்று கூறுவது வழக்கம். கௌரவத்தைப் பார்க்கும் சில படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படத்தைத் திரையிட்டுக் காட்டாமலேயே விலைபேசி முடிப்பார்கள். படம் முழுவதையும் போட்டுக் காட்டி விலை பேசும் படத் தயாரிப்பாளர்களும் உண்டு.'' என்று பதிலளித்தார்கள்.

கணிப்பு

''படத்தைப் பார்த்தவுடன் அது வெற்றிப் படமாக அமையும்; அல்லது தோல்விப் படமாக இருக்கும் என்று உங்களால் எப்படிக் கணிக்க முடிகிறது?''

''கணிப்பு என்பது ஓரளவுதான் அதிக நாட்கள் ஓடும் என்று நினைக்கும் படங்கள் ஓடாமல் போவதுண்டு; படம் தோல்வியடையும் என நினைத்திருக்க எதிர்பாராமல் அது அதிக நாட்கள் ஓடுவதுமுண்டு. எல்லாமே அவரவர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.''

''நீங்கள் எப்படிப்பட்ட படங்களைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?

''எனக்குக் குடும்பப் பாங்கான படங்கள்தான் பிடிக்கும். அதிலும் குறிப்பாக பெண்களைப் பெருமைப் படுத்துகிற கதையமைப்பு இருக்க வேண்டும். நல்ல இனிமையான பாடல்களுக்காகவும் சில படங்களை விரும்புவதுண்டு.''

வேறுபாடு

''20, 25ஆண்டுகளுக்கு முன்பு வெளியான படங்களுக்கும் இப்போது வருகிற படங்களுக்கும் என்ன வேறுபாடு?''

''முன்பெல்லாம் கறுப்பு-வெள்ளைப் படங்கள்தான் வெளி வந்தன. இப்போது எல்லாமே வண்ணப் படங்கள் தான். இப்போது கறுப்பு - வெள்ளைப் படங்களைப் பார்க்க மக்கள் விரும்புவதில்லை. பழைய படங்கள் தரமாக இருக்கின்றன. இப்போதைய படங்கள் தயாரிப்பு அளவில் உயர்ந்திருக்கின்றன அவ்வளவுதான்.''

''முன்பு போல இப்போது தமிழ்ப் படங்களுக்கு அதிகமாக 'பிரிண்டுகள்' போடுவதில்லை என்கிறார்களே?''

''அது உண்மைதான். 1950ல் ஒரு பெரிய நடிகர் நடித்த படத்திற்கு 40 பிரிண்டுகள் போட்டார்கள். இப்போது அதே நடிகரின் படத்திற்கு 25 பிரிண்டுகள்தான் போடுகிறார்கள். பாசிடிவ் ஃபிலிம் விலை ஏறிப் போய்விட்டதே அதற்குக் காரணம். இப்போது 18 ஆயிரம் அடிகள்- அதாவது 4450 மீட்டர்கள் நீளமுள்ள கறுப்பு - வெள்ளைப் படத்திற்குச் சுமார் 10 ஆயிரம் ரூபாயும் அதே நீளமுள்ள வண்ணப் படத்திற்குச் சுமார் 25 ஆயிரம் ரூபாயும் ஆகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். 'திருவிளையாடல்' வண்ணப் படம் தயாரானபோது ஒரு பிரிண்டின் அடக்க விலையே ரூபாய் 7 ஆயிரம் தான்.''

"ஹரிதாஸ்"

''அந்தக் காலத்தில் ஹரிதாஸ், சிந்தாமணி போன்ற சில படங்கள் 52 வாரங்கள், 72 வாரங்கள் என்று ஓடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது ஏன் அவ்வளவு நாட்கள் படங்கள் ஓடுவதில்லை?''

''அப்போதை படங்களில் தரம் இருந்தது; கருத்து இருந்தது. எவ்வளவு பாடல்கள் இருந்தாலும் முகம் சுளிக்காமல் ரசித்தார்கள். அப்போது, இன்றுள்ளது போல் நிறையப் படங்கள் வெளிவரவில்லை. பார்த்த படங்களையே திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை. இதுவும் ஒரு

காரணம். இப்போது 100ல் 10 படங்கள் 100 நாட்களைக் கடந்து ஓடுவதே அபூர்வமாக இருக்கிறது.''

ஈர்ப்பு

''திரைப்படத் தொழில் பலரையும் ஈர்ப்பதற்கு என்ன காரணம்?''

இது யாரையும் கவர்ந்திழுக்கும் தொழில் என்பதோடு பணம், புகழ், செல்வாக்கு ஆகியவற்றிற்கு வழிவகுப்பதாக இருக்கிறது. கவலைகளில் எந் நாளும் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு புத்துணர்வூட்டும் தொழிலாகவும் இது இருப்பதால் பலரும் இதை விரும்புகிறார்கள்.''

முன்னேற

திரைப் படத் தொழிலில் முன்னேற என்னென்ன தகுதிகள் வேண்டும்?''

''தகுதிகள் ஒருபுறமிருக்க இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள் சொந்தமாக மூலதனம் போடக் கூடியவர்களாகவும் அனுபவமிக்கவர்களாகவும் கெட்ட பழக்க வழக்கங்கள் இல்லாதவர்களாகவும் சபல புத்தியற்றவர்களாகவும் சொந்தமாகச் சிந்தித்து செயல்படுபவர்களாகவும் இருந்தால் நிலைத்து நிற்க முடியும். அத்துடன் அதிர்ஷ்டமும் இருந்தால் பெருத்த இலாபமும் கிடைக்கும்''

இவர்கள் 'நகரத்தார் குரல்' ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களைப் பற்றிக் கூறும்போது ''திரைப்பட விநியோகத் துறையில் இறங்குமாறு நான் அண்ணன் 'சீனுதானு' அவர்களைப் பல ஆண்டுகள் வற்புறுத்திக் கொண்டே இருந்தேன். ஆனால் அவர்கள் என்ன காரணத்தாலோ ஒதுங்கிக் கொண்டே வந்தார்கள். இன்று அவர்கள் எனக்கு யோசனை சொல்லும் அளவிற்கு அந்தத் துறையில் சிறந்து விளங்குகிறார்கள்'' என்று கூறினார்கள்.

பேட்டி: எஸ். சுந்தரம்

மதுரை நகர விடுதியில் பிள்ளையார் நோன்பு


சென்ற மூன்றுண்டுகளைப் போல் இவ்வாண்டும் வருகிற 21-12-82 (செவ்வாய்) அன்று மதுரை நகர விடுதியில் 'பிள்ளையார் நோன்பு' சிறப்பாகக் கொண்டாடப் பெறுமென்றும் அதில் கலந்துகொண்டு இழையெடுத்துக் கொள்ள விரும்புபவர்கள் பெரியவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 4-00 வீதமும் 10 வயதுக்குட்பட்ட சிறியவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2-00 வீதமும் முன்னதாகவே நகர விடுதி அலுவலகத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளும்படியாக சங்கச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வரலாற்று ஆசிரியர்: ராமு, சீனு எங்கே இருக்கிறது?

ராமு: 'சா'வுக்குப் பக்கத்தில் இருக்கிறது.

— சுப. அழகப்பன், குருவிக்கொண்டான்பட்டி

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.



வேலூர் சிறப்புக் கூட்டத்தில் விழாத் தலைவர் திரு. வி. என் சிதம்பரம் செட்டியார் உரையாற்றுகிறார். அருகே (இடமிருந்து வலமாக) துணைத் தலைவர் திரு. மு. ராம. சே. இராமசாமிச் செட்டியார், திரு. பழ. கருப்பையா, துணைச் செயலாளர் திரு. திருநாவுக்கரசு.

ஓர் யோசனை!

நம் சமூகத்தினர் பல மாநிலங்களில் பல வகையான தொழில்களைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். அந்தந்தத் தொழில்களுக்கு அந்தந்தத் தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள், அனுபவப்பட்டவர்கள் நம் சமூகத்தில் பலபேர் இருந்தும் அவர்களைப் பற்றி, அவர்கள் இருக்குமிடம் பற்றி விவரம் தெரியாமல் அந்த வேலைகளுக்கு வேறு சமூகத்தினரை நம்மவர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அதுபோல் நம் இனத்தவர்களில் தொழில் தெரிந்த இளைஞர்கள் தங்களுக்குத் தேவையான வேலை எங்கு உள்ளது என்ற விவரம் தெரியாமல் திண்டாடுகின்றனர்.

ஆகவே வேலைக்கு ஆள் தேவைப்படும் நம்மவர்க்கும் வேலை தேடி அலையும் நம் இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக ''நகரத்தார் குரல்'' இருக்க வேண்டும். வேலைக்கு ஆள் எடுக்கும் நிறுவனம், வேலை தேடுவோர் பற்றிய முகவரி விவரங்களைக் கட்டணமின்றி அல்லது சிறிய தொகையைக் கட்டணமாக வசூலித்து, வெளியிட்டு நகரத்தாருக்கு நற்பணி செய்ய முன்வரலாம்.

இதைப் போல திருமணத்திற்குத் தயாராக இருக்கும் மாப்பிள்ளை, பெண் அவர்களுடைய கோவில் மற்றும் எல்லா விவரங்களையும் கட்டணமின்றி அல்லது சிறிய தொகையைக் கட்டணமாக வசூலித்து வெளியிட்டு நல்வழி காட்டலாம்.

தங்களன்புள்ள,
வேகுப்பட்டி இராம. சோலையன்
மதுரை.

Regd. No. TN/MA(C) 106 Nagarathar Kural